Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, JANUARY 15, 2022

சனிக்கிழமை ஜனவரி 15, 2022 | ஒளி: 07 கதிர்: 206 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | விலை ரூ.10

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

# சதி என்று தெளிவாக தெரிகிறது



### ஜனாதிபதி தேர்தலில் ஆதாயத்தைப் பெற செய்யப்பட்டிருக்க வேண்டும் என்கிறார் பேராயர்

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் ஒரு சதி என்பது தெளிவாகத் தெரிகிறது என்று தெரிவித்த கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, ஜனாதிபதி தேர்தலை மனதில் கொண்டு இது செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் ஆர்வமுள்ள சில நபர்கள் இந்திய உளவுப் பிரிவு வழங்கிய தகவல்களைப் புறக்கணித்துள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது எனத் தெரிவித்தார். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் ராகம தெவத்த தேசிய பசிலிக்காவில் நேற்று (14) இடம்பெற்ற விசேட ஆராதனையின் பின்னரே மேற்கண்ட விடயத்தை ஊடகங்களிடம் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

தேவாலய கைக்குண்டு விவகாரம்

## பின்னணியில் பெரிய சூத்திரிதாரி இருக்கிறார்




அண்மையில் தனியார் வைத்தியசாலை கழிவறையில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் மற்றும் பொரளை அனைத்து புனிதர் தேவாலயத்தில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் பெரிய சூத்திரதாரி இருப்பதாக பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

தேவாலய கைக்குண்டு விவகாரம்

## விசாரணைகள் இன்னும் முடியவில்லை



பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கண்டெடுக்கப்பட்ட கைக்குண்டு தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன, நேற்று (14) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

எதிர்வரும் காலங்களில்

## 24 மணிநேர மின்வெட்டு ஏற்படலாம்

### இ.மி.ச. ஊழியர் சங்கம் எச்சரிக்கை



எதிர்வரும் காலங்களில் நாட்டில் 24 மணிநேர மின்வெட்டு ஏற்படக் கூடும் என்று இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. எதிர்வரும் நாள்களில் மின் தட்டுப்பாடு காரணமாக நாட்டின் செயற்பாடுகள் ஸ்தம்பிக்கக் கூடும் என்று, சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார். மின்சாரத் துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுகளை வழங்கத் தவறியதன் விளைவாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2





## தேவாலயத்தில் தைப் பொங்கல்

மட்டக்களப்பு மாவட்டம் தேத்தாத்தீவு புனித யூதாதேயு தேவாலயத்தில் தைப்பொங்கலை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை (14) காலை 6.30 மணியளவில் திருப்பலி பூசை இடம்பெற்றது. திருத்தலத்தின் குரு அருட்திரு நிர்மல் சூசைராஜ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இத்திருப்பலி பூசையில் அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

(படப்பிடிப்பு: வ. சக்தி)



சபை அமர்வின் ஆரம்ப நிகழ்வை

## எளிமையாக நடத்துமாறு ஜனாதிபதி பணிப்பு

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்வின் ஆரம்ப நிகழ்வை மிகவும் எளிமையான முறையில் நடத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்ற பிரதானிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என்று அறியமுடிகிறது.

தொடர்ச்சி P2

## கொழும்பிலிருந்து சென்றது

### கொட்டகலையில் நின்றது



கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை நோக்கி பயணித்த பொடி மெனிக்கெ ரயில் சமிஞ்ஞை பிரச்சினை காரணமாக கொட்டகலை ரயில் நிலையத்தில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

விவசாயிகளின் சாபம்

## அரசாங்கத்தை சும்மா விடாது



இந்நாட்டின் உண்மையான பெரும்பான்மையினர் விவசாயிகள் என்று தெரிவித்த தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், விவசாயிகளின் சாபம் இந்த அரசாங்கத்தை சும்மா விடாது எனத் தெரிவித்தார். ஜனநாயக மக்கள் முன்னணியின் வருடாந்த பொங்கல் விழா, கொழும்பு வெள்ளவத்தை, காலி வீதி சந்தைக்கு எதிரில் நடைபெற்றது. ஐ.ம.மு கட்சி உறுப்பினர்கள், சிறப்பு விருந்தினர் டெலோ கட்சி பேச்சாளர் சுரேன் குருசுவாமி ஆகியோருடன் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ரயில் நிலைய அதிபர்கள் சங்கம்

## மீண்டும் பணிப்புறக்கணிப்பு

உடனடியாக அமலுக்கு வரும் வகையில் நேற்று (14) நண்பகல் முதல் மீண்டும் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக ரயில் நிலைய

தொடர்ச்சி P2



## சு.கவுக்குள் பிளவுகள் இல்லை



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்ளக முரண்பாடுகள் எதுவும் இல்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். ஊடகங்களுக்கு நேற்று (14) கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார். சில கட்சிகள் கிராமங்களுக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு அவ்வாறான கவலைகள் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

இ.மி.சவுக்கு நாளாந்தம்

## 1,500 மெற்றிக் தொன் டீசல்

### பெற்றோலிய கூட்டுத்தாபனம் வழங்குகிறது




மின் உற்பத்தி நிலையங்களை இயக்குவதற்காக இலங்கை மின்சார சபைக்கு நாளாந்தம் 1,500 மெற்றிக் தொன் டீசல் வழங்கப்படும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க, நேற்று (14) காலை தெரிவித்தார்.

நேற்று (14) முதல் களனிதிஸ்ஸ மின் நிலையத்திற்கு எரிபொருள் விநியோகத்தை ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

நாடளாவிய ரீதியிலுள்ள

## கல்வியியற் கல்லூரிகளை திறக்குமாறு பணிப்புரை



நாடளாவிய ரீதியிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளை இன்று (15) முதல் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். கொரோனா தொற்றுநோய் காரணமாக மூடப்பட்ட கல்லூரிகள், தனிமைப்படுத்தல் மற்றும் கொரோனா சிகிச்சை மையங்களாகப் பயன்படுத்தப்பட்டன.

தொடர்ச்சி P2



## இந்தோனேசியாவில் பாரிய நிலநடுக்கம்

இந்தோனேசியாவின் லாபுனில் இருந்து தென்மேற்கே 88 கிலோ மீற்றர் தூரத்தில், நேற்று வெள்ளிக்கிழமை (14) 3 ஆம் நிலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்தது.

கொழும்பில் இருந்து 3,207 கிலோ மீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகவும்,

தொடர்ச்சி P2

கொழும்பில் தற்காலிகமாக தங்கியிருக்கும்

## அனைவரினதும் தகவல்களை சேகரிக்கிறது பொலிஸ்

கொழும்பில் தற்காலிகமாக தங்கியிருக்கும் நபர்களின் வெளிப் பிரதேசங்களைச் சேர்ந்தோரின் தகவல்களைத் திரட்டும் வேலைத்திட்டத்தை மேல் மாகாண சமூக பொலிஸ் பிரிவு ஆரம்பித்துள்ளது.

தொடர்ச்சி P2

கடலில் குளிக்கச் சென்ற

## மாணவர்கள் இருவர் மாயம்

ஆர். ஜெயஸ்ரீராம், ஏ.எச்.ஏ. ஹுஸைன்



மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கிரான், சின்னவெம்பு எனும் கடல் பகுதியில் குளிக்கச் சென்ற மாணவர்களில் இருவர் கடலில் மூழ்கி மாயமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வெள்ளிக்கிழமை (14) தைப்பொங்கல் தினத்தன்று பிற்பகலில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கிரான்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சதி என்று தெளிவாக தெரிகிறது

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019 ஜனாதிபதித் தேர்தலில் ஆதாயத்தைப் பெறுவதற்காக தேவையற்ற அச்சம், நிச்சயமற்ற தன்மை மற்றும் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் உளவுத்துறை அறிக்கைகள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லையா என்பது குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை பரிந்துரைக்கிறது என்று பேராயர் கூறினார்.

தாக்குதல்கள் நடந்து 1,000 நாட்கள் கடந்துவிட்டன என்றும் உண்மைகளை மறைக்க முயலும் தனிநபர்களின் பொய்கள், கடவுளின் கிருபையால் வெளிப்படுத்தப்படுகின்றன என்றும் கூறினார்.

சில அரசியல்வாதிகள் இந்த தாக்குதல்களை அரசியல் ஆதாயங்களுக்காக பயன்படுத்தியதாக குற்றம் சாட்டிய பேராயர், மேலும் இந்த நபர்கள் விசாரணை மற்றும் உண்மையை வெளிக்கொணரும் முயற்சிகளை முறியடித்துள்ளனர் என்பது தெளிவாகிறது என்றார்.

பொலிஸ் மா அதிபர் மற்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஆகியோரையும் கர்தினால் கடுமையாக விமர்சித்தார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கையானது ஆதாரங்களின் அடிப்படையில் முறையாக உருவாக்கப்பட்ட உத்தியோகபூர்வ சட்ட ஆவணம் என்று குறிப்பிட்ட அவர், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிக்கையை மதிப்பில்லாத ஆவணமாக குறைமதிப்புக்கு உட்படுத்த முயற்சித்துள்ளார். பொலிஸ் ஊடகப் பேச்சாளருக்கு அவ்வாறு செய்ய அதிகாரம் உள்ளதா என கர்தினால் மல்கம் ரஞ்சித் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த அறிக்கையை பொதுமக்களுக்கு வெளிப்படுத்துமாறு அதிகாரிகளை அவர் கேட்டுக் கொண்டார்.

அறிக்கையில் குறிப்பிட்ட சில அதிகாரிகள் தமது கடமைகளை புறக்கணித்ததாகக் காணப்பட்ட போதிலும் அவர்களுக்கு எவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தாக்குதல் நடத்தப்படுவதைத் தடுக்காத தலைவர்களின் உண்மை வெளிப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் பொரளை அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பல குறைபாடுகள் காணப்படுவதாக கொழும்பு பேராயர் தெரிவித்துள்ளார்.

அன்று காலை தேவாலயத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்து கொண்ட ஒரு நபரை அதிகாரிகள் விசாரிக்கத் தவறியது ஏன் என்று கேள்வி எழுப்பிய அவர், சம்பவம் தொடர்பாக அப்பாவிகள் கைது செய்யப்பட்டதாகக் கூறினார்.

விசாரணைகள் கடுமையான முறையில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேவாலயத்தில் கைக்குண்டு வைக்கப்பட்டுள்ளமைக்கான காரணத்தை பொலிஸார் ஆராய்ந்து ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு இடையில் ஒற்றுமைகள் உள்ளதா என கர்தினால் மல்கம் ரஞ்சித் கேள்வி எழுப்பியுள்ளார்.

அனைத்து சம்பவங்களின் பின்னணியில் உள்ள உண்மை வெளிவரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பின்னணியில்...

இந்தச் சம்பவம் அரசாங்கம் உட்பட நாட்டின் பாதுகாப்புப் படையினரை தர்மசங்கடத்தில் ஆழ்த்தும் ஒரு நாசகார செயலாக இருக்கலாம் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது இரண்டு நாட்களேயான நிலையில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பிரதான சந்தேக நபரைக் கைதுசெய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொலிஸாருக்கு வழங்க வேண்டிய தகவல்களை பொலிஸாருக்கு வழங்காமல் ஊடகங்களுக்கு வழங்குவதன் மூலம் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ளமையால் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதற்கு தடையாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## விசாரணைகள்...

இதில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் தரம் பாராமல் தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் விசாரணைகள் முடிவடைந்தவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் எனவும் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

சம்பவம் தொடர்பில் நேற்று வெளியிட்ட விசேட அறிக்கையொன்றிலேயே மேற்குறிப்பிட்ட விடயங்களை பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

பொரளை பொலிஸாரினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினருக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுற்றுப்புற பகுதிகளில் இருந்து பெறப்பட்ட சிசிடிவி காட்சிகள் சட்டத்துக்கு உட்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும், மேலும் ஆதாரங்கள் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இச்சம்பவம் தொடர்பாக குற்றத்தடுப்புப் பிரிவினரால் இதுவரை 14 வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களின் உதவிகள் விசாரணைகளில் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் மற்றும் கைக்குண்டு வைப்பதன் பின்னணியில் உள்ள நோக்கம் விரைவில் கண்டறியப்படும் என்று கூறிய அவர், இந்த நடவடிக்கை சதித்திட்டத்தின் ஒரு பகுதியா என்பது குறித்து விசாரணை நடத்தி வருவதாகக் கூறினார்.

# 24 மணிநேர மின்வெட்டு ஏற்படலாம்

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை நாடு கடும் வரட்சியை எதிர்கொள்வதை இலங்கை மின்சார சபை அறிந்துள்ளதாகத் தெரிவித்த அவர், எவ்வாறாயினும், வரட்சிக்கு முகம் கொடுக்க இலங்கை மின்சார சபை தயாராக இல்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு மழை வீழ்ச்சி குறைவாக காணப்பட்டதாகத் தெரிவித்த அவர், நீர் மின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வருவதாகவும் கூறினார்.

# அரசாங்கத்தை சும்மா விடாது

அங்கு மனோ எம்பி மேலும் கூறியதாவது,

தை பிறந்தால் வழி பிறகும் என நாம் பாரம்பரியமாக கூறி வருகிறோம். தீர்வு பிறக்கும் எனவும் கூறி வருகிறோம். இந்த வருடம் தை இன்று பிறந்துள்ளது. இந்த தையில் தீர்வு பிறக்கவில்லை. ஆனால், தீர்வுக்கான வழி பிறந்து விட்டது என நான் எண்ணுகிறேன். அதோ தீர்வு வருகிறது என கை காட்ட கூடிய, குறி சொல்ல கூடிய வழி பிறந்து விட்டது என நான் எண்ணுகிறேன்.

நாட்டின் நெல் விளைச்சலை, காய்கறி விளைச்சலை, கிழங்கு விளைச்சலை அதிகரிக்க வேண்டுமென்றால் அதற்கு கட்டாயமாக உரம் தேவை. இன்று இந்நாட்டில் இந்த அரசாங்கத்தின் முட்டாள்தனமான கொள்கை காரணமாக உரம் இல்லை.

## மீண்டும்...

ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் உப தலைவரை பணி இடைநிறுத்துவதற்கு ரயில்வே பொது முகாமையாளரால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிராகவே பணிப்புறக்கணிப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பல கோரிக்கைகளை முன்வைத்து ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் முன்னெடுத்திருந்த 24 மணிநேர தொழிற்சங்க போராட்டம் நேற்று முன்தினம் (13) நள்ளிரவு முதல் நிறைவுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

தொழிற்சங்க நடவடிக்கை முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதும் ரயில்களை இயக்குவதற்குச் சமிக்ஞை பரிசோதகர்களின் உறுதிப்படுத்தல் அவசியமாகும் எனவும் அந்த சங்கம் தெரிவித்திருந்தது.

தைப்பொங்கல் தினம் நேற்று கொண்டாடப்பட்ட நிலையிலும் நீண்ட வார இறுதி விடுமுறை வருகின்ற நிலையிலும் ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டமையினால் பொது மக்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

சங்கத்தின் பணிப்புறக்கணிப்பு காரணமாக நேற்று முன்தினம் தினம் 200க்கும் மேற்பட்ட ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டதுடன், 85 ரயில்கள் மாத்திரமே சேவையில் ஈடுபட்டன.

# மாணவர்கள் இருவர் மாயம்

பிரதான வீதி எனும் முகவரியைச் சேர்ந்த ஜீவானந்தம் சுஜன் (வயது 15), பாடசாலை வீதி கிரான் எனும் முகவரியைச் சேர்ந்த சத்தியானந்தன் அக்ஷயன் (வயது 15) ஆகிய இரு மாணவர்களே காணாமல் போயுள்ளனர். நண்பர்களாகச் சேர்ந்து கடலுக்கு குளிக்கச் சென்ற நிலையில், கடலலையில் அகப்பட்டுள்ளனர். அள்ளுண்டு செல்லப்பட்டவர்களில் ஒரு சிறுவன் கைகளை உயர்த்தி அபயக் குரல் எழுப்பியுள்ளார்.

அதனை அவதானித்த, அவ்விடத்தில் நின்ற மீனவ இளைஞர் ஒருவர் உடனடியாக கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தோணியை எடுத்துக் கொண்டு சிறுவன் மூழ்கிய இடத்துக்கு விரைந்து அந்தச் சிறுவனைக் காப்பாற்றி கரை சேர்த்துள்ளார்.

அப்பொழுது மேலும் இருவர் மூழ்கிய விவரத்தை அந்தச் சிறுவன் மீனவ இளைஞரிடம் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து மீனவ சுழியோடிகளும் பொதுமக்களுமாகச் சேர்ந்து கடலலையில் அள்ளுண்டு கொண்டு செல்லப்பட்ட சிறுவர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

காப்பாற்றப்பட்ட கிரான், யூனியன் வீதியைச் சேர்ந்த தனுகன் துஷான் (வயது 16) எனும் சிறுவன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை மற்றும் கல்குடா பொலிஸார் இணைந்து விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.



## கொழும்பிலிருந்து...

இதனால் குறித்த ரயிலில் வந்த பயணிகள் அமைதியற்ற வகையில் செயற்பட்டதுடன், ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியை கொட்டகலை நகரில் மறித்து ஆர்ப்பாட்டத்தலும் ஈடுபட்டனர்.

கொட்டகலை ரயில் நிலையம் மூடப்பட்டதன் காரணமாக கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி பயணித்த பொடிமெனிகே ரயில் நேற்று (14) மதியம் 12.45 அளவில் கொட்டகலையில் இடைநடவே நிறுத்தப்பட்டது. இதனால் ஹட்டன் மற்றும் திம்புளை பத்தனை பொலிஸார் இணைந்து ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியின் கொட்டகலை புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள ரயில் கடவைக்கு பலத்த பாதுகாப்பு வழங்கி கொட்டகலை ரயில் நிலையம் வரை குறித்த ரயிலை பாதுகாப்புடன் அழைத்துச் சென்றனர்.

மேற்படி நடவடிக்கையால் நீண்ட விடுமுறை காரணமாக வெளியிடங்களுக்கு செல்வோரும், தைப்பொங்கல் பண்டிகையை கொண்டாட சொந்த ஊருக்கு செல்லும் தமிழ் மக்கள் என ஏராளமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் இதனால் கடும் சிரமங்களுக்கும், பல்வேறு அசௌகரியங்களுக்கும் உள்ளாகினர்.

போராட்டக்காரர்கள் கட்டுக்கடங்காமல் கொட்டகலை நகரில் சென்று போராட்டத்தில் ஈடுபட்டதால் நகர வீதியில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## சு.கவுக்குள்...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் மத்திய குழு மற்றும் அமைப்பாளர்கள் உந்துதலுடனும் ஆதரவுடனும் இருப்பதாகத் தெரிவித்த அமைச்சர், கட்சிக்குள் பிளவுகள் எதுவும் இல்லை என்றும் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், கொரோனா 19 பரவுவதற்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து கட்சி சீர்திருத்தங்களை மேற்கொள்ள முடியாது எனவும், எனவே கட்சி பிரதிநிதிகள் கிராமங்களுக்கு சென்று கூட்டங்களை ஏற்பாடு செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முயற்சிகளால் எந்தவொரு தனிநபரும் கவலையடைய வேண்டாம் என்று கூறிய அமைச்சர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பில் பலர் பலவிதமான கூற்றுக்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை அவதானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# 1,500 மெற்றிக் தொன் டீசல்

மின்சார சபைக்கு மேலும் எரிபொருள் கடன்களை வழங்குவதற்கான சாத்தியம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேவையான மசகு எண்ணெய் கையிருப்புகளை வாங்குவதற்கு நிதியை விடுவிக்குமாறு மின்சார சபையிடம் கோரியதாகவும் தெரிவித்தார்.

உடனடி மின்சார நெருக்கடி காரணமாக பொதுமக்கள் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுப்பது தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது, அடுத்த 16 நாட்களுக்கு மட்டுமே அவசர நிலை ஏற்படும் எனவும், அதனை சிறப்பாக நிர்வகிக்க நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாகவும் விஜேசிங்க கூறினார்.

தற்போதைய எரிபொருள் இருப்புக்களை நிர்வகிப்பதற்கு மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்மதாபனம் இணைந்து செயல்படும் என்று கூறிய அவர், செவ்வாய்க்கிழமை (18) மற்றுமொரு விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## கல்வியியற்...

இன்று மீண்டும் திறக்கப்படும் மேற்படி கல்லூரிகளின் கல்வி நடவடிக்கைகள் செவ்வாய்க்கிழமை (18) ஆரம்பிக்கும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனா தொற்றுநோய் வேகமாகப் பரவியதால் 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 திகதியன்று இந்தக் கல்லூரிகள் மூடப்பட்டு தனிமைப்படுத்தல் மற்றும் கொரோனா சிகிச்சை மையங்களாகப் பயன்படுத்தப்பட்டன.

குறித்த கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும் அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## இந்தோனேசியாவில்...

ரிக்டர் அளவுகோலில் 6.6 ஆக பதிவாகியுள்ளதாகவும் பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்றும் இலங்கையில் கரையோரப் பகுதி பாதுகாப்பாக இருப்பாகவும் பணியகம் தெரிவித்துள்ளது.

## அனைவரினதும்...

நேற்று (14), இன்று (15) மற்றும் நாளைய (16) தினங்களில் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வீடுகள், அலுவலகங்கள், வியாபார நிலையங்கள், அரச அல்லது தனியார் காணிகளில் இடம்பெறும் நிர்மாணங்கள் போன்றவற்றில் தற்காலிகமாக தங்கியிருப்போரின் விவரங்கள் பெறப்படவுள்ளன.

தேசிய பாதுகாப்பை உறுதி செய்தல் குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் பாவனையை ஒழிக்கும் நோக்கிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல், குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் பாவனையை ஒழித்தல் என்ற தொனிப்பொருளிலேயே இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த 3 நாட்களுக்குள் வருகை தரும் பொலிஸ் அதிகாரிகள் வழங்கும் படிவத்தைப் பெற்று, தற்காலிகமாக உங்கள் வசிப்பிடத்தில் காணப்படும் நபர்களின் விவரங்களைக் குறிப்பிட்டு அந்தப் படிவத்தை பூர்த்தி செய்து அந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு அல்லது அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறும் பொலிஸ் ஊடகப் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது.

## எளிமையாக நடத்துமாறு...

இதன்படி, இவ்வருட நிகழ்வில் வணக்கம் செலுத்துதல் மற்றும் வாகன அணிவகுப்பு இடம்பெறாது என பாராளுமன்ற பிரதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதியை வைபவத்துக்கு வரவேற்கும் வகையில் பொலிஸ் கலாசாரப் பிரிவினர் பாராளுமன்றத்துக்கு முன்பாக சில கலாசார வணக்கங்களை மாத்திரம் வழங்குவர்.

இதேவேளை, அரசியலமைப்பின் 33 (2) பிரிவின் மூலம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதற்கு முன்னதாக ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு ஜனாதிபதியின் தலைமையில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்படும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

எட்டு வருடங்களாகியும் நிரந்தர நியமனம் இல்லை

# பணியோ பெரிது; பணமோ சிறிது

வ. சக்திவேல்
shagthivel@gmail.com



“நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில், எட்டு வருடங்களுக்கு மேலாக தற்காலிகம், அமையம், பதிலீடு போன்ற முறைமைகளின் கீழ் ஊழியர்களாகக் கடமையாற்றி வருகின்றோம். உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம், சேவை மற்றும் ஏனைய ஒவ்வொரு செயற்பாடுகளிலும், எமது சேவைகள் அளப்பெரியன. நாங்கள் எந்த நிலைமைகளிலும் காலம், நேரம் பாராது முழு மனதுடன் சேவையாற்றுவதுடன் சூழல் சுத்திகரிப்பு, அனர்த்த நிலைமைகள், தற்போதைய கொவிட்-19 தொற்றுநோய் நிலைமைகளிலும் எமது சுகாதாரத்தையும் உயிரையும் துச்சமாக நினைத்து, பொதுநல செயற்பாடுகளில் உள்ளூராட்சி மன்றங்களுடன் ஒன்றிணைந்து, பாடுபட்டு உழைத்து வருகின்றோம்.

அத்துடன் நாங்கள், மாதாந்தம் குறைந்த ஊதியத்தைப் பெற்று வருகின்ற போதிலும் பிரதேச சபைகளின் சேவை, முன்னேற்றம், அபிவிருத்தி போன்றவற்றுக்கு அயராது உழைக்கத் தவறியதேயில்லை. ஒவ்வோர் ஊழியரினதும் குடும்பம் குறைந்த மாதாந்த வருமானத்தைக் கொண்டு தற்பொழுது ஏற்பட்டுள்ள விலைவாசி அதிகரிப்புக்கு முகம்கொடுத்து வாழ வேண்டிய ஓர் இக்கட்டான சூழ்நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளோம்.

எட்டு வருடங்களுக்கு மேல் இவ்வாறு பாரிய சேவைகளை வழங்குகின்ற போதிலும் இன்று வரை எங்களுக்கான எந்தவித ஒரு நிரந்தர நியமனமும் வழங்கப்படாமையால் எங்களைப் புறக்கணிப்பதாக உணர்வதுடன் உளரீதியாக பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளோம். அத்துடன் எங்களில் மாறுபட்ட வயது உடையவர்களுக்கு இன்னும் கால நீடிப்பால் நிரந்தர நியமனம் பெற்றுக்கொள்வதில் பெரும் தாக்கம் ஏற்படும் என மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்காலிக அடிப்படையில் கடமையாற்றிவரும் ஊழியர்கள் அங்கலாய்க்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் சுமார் எட்டு வருடங்களுக்கு மேலாக தற்காலிகமாகவும், அமைய அடிப்படையிலும் கடமைபுரியும் ஊழியர்கள் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களின் முன்னால் அண்மையில் பதாகைகளை ஏந்தியவாறு தமக்கு வழங்கப்பட்ட தற்காலிக, அமைய அடிப்படையிலான நியமனத்தை நிரந்தரமாக்குமாறு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

கால நீடிப்பு வேண்டாம்; எமக்கு நிரந்தர நியமனம் வேண்டும்; இந்த அரசை நாம் நம்புகின்றோம்; இது எங்களது நியாயமான கோரிக்கை; எங்களுக்கான நிரந்தர நியமனத்தைத் தாருங்கள் உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் ஊழியர்கள், மாதாந்தம் பத்தாயிரம் ரூபாய்க்குக் குறைந்த தொகையையே ஊதியமாகப் பெறுகின்றனர். இதற்கு முன்பிருந்த நல்லாட்சி அரசாங்கமும், தற்போதுள்ள அரசாங்கமும் இவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இன்னும் தற்போதைய அரசும் பாராமுகமாக தொடர்ந்து இருந்து விடாமல் இந்த தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டும்.

“எமது பிரதேச சபையில் அமைய அடிப்படையில் கடமை புரிகின்ற ஊழியர்கள் சுமார் 8 வருடங்களாக கடமையாற்றுகின்றவர்களுக்குக்கூட இன்னும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. கடந்த 2014 ஆம் ஆண்டு இதே அரசாங்கத்திலுள்ள பிரமதமர் அப்போது ஜனாதிபதியாக இருக்கின்ற காலத்தில் வழங்கப்பட்ட தற்காலிக நியமனங்கள்கூட இன்னும் நிரந்தரமாகக்கப்படவில்லை.

தற்போதைய பொருளாதாரச் சூழலுக்கு மத்தியில் இந்த தொழிலாளர்களை அரசாங்கம் மிக விரைவில் நிரந்தரமாக்குவதற்கு முன்வர வேண்டும். மக்களுக்குரிய சேவையை நாம் வழங்குவதற்கு அமைய அடிப்படையில் இதுவரையில் கடமையாற்றி வருகின்ற சுகாதார தொழிலாளர்கள், நூலக உதவியாளர்கள், உள்ளிட்ட, ஊழியர்களின் நிரந்தர நியமனம் என்பது காலத்தின் கட்டாயமாக்கப்பட வேண்டியதாகும்.

கொரோனா காலத்திலும்கூட ஏனைய ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்த போதும் எமது இந்த ஊழியர்கள் தமது உயிரை துச்சமென நினைத்து மிகவும் பொறுப்புணர்வுடன் கடமையாற்றினார்கள். அரசாங்கம் ஒரு லெட்சம் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்திலாவது தொழில்கள் பயிற்றப்பட்ட இந்த ஊழிகயர்களுக்கு நியமனம் வழங்கியிருக்கலாம். எனினும் வரவு செலவுத்திட்டத்தின் பின்னராவது இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

எமது பிரதேச சபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கிழக்கு மாகாணத்தில் மூன்று ஆளுனர்கள் மாறி மாறி வந்துள்ளார்கள். அவர்கள் அனைவரிடமும் எமது சபையில் அமைய அடிப்படையிலும், பதிலீட்டு அடிப்படையிலும் கடமையாற்றுகின்றவர்களை நிரந்தரமாக்குவது தொடர்பில் எடுத்துரைத்தோம். இன்னும் அது தொடர்பில் எதுவித முன்னேற்றமும் இடம்பெறவில்லை என போரதீவுப் பற்றுப் பிரதேச சபையின் தவிசாளர் யோ.ராஜனி தெரிவிக்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று வடக்கு உள்ளூராட்சி மன்றத்தில் 21 உத்தியோகஸ்தர்களும் கோறளைப்பற்று மேற்கில் 62 பேரும், கோறளைப்பற்றில் 29 பேரும், ஏறாவூர்பற்றில் 41பேரும், மண்முனை மேற்கில் 24 பேரும், மண்முனை தென்மேற்கில் 19 பேரும், மண்முனையில் 41 பேரும், மண்முனை தென் எருவில் பற்றில் 65 பேரும், போரதீவுப் பற்றில் 41 பேரும், காத்தான்குடி நகரபையில் 83 பேரும், ஏறாவூர் நகர சபையில் 67 பேரும் என பதிலீட்டு ஊழியர்கள், பதிலீட்டு வேலைத் தொழிலாளிகள், பதிலீட்டு சுகாதாரத் தொழிலாளிகள், பதிலீட்டு சாரதிகள் என இவ்வாறு இதுவரையில் நிரந்தர நியமனம் இல்லாமல் கடமையாற்றி வருகின்றனர்.

இவர்கள் 2013.05.08, 2015.05.03, 2016.04.16, 2017.02.01, 2018.08.01, 2019.19.07, 2021.01.01, ஆகிய திகதிகளிலேயே கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வாறு நியமனம் பெற்றவர்கள் மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்ததுக்கு உட்பட்ட 11 உள்ளூராட்சி மன்றங்களிலுமாக 493 பேர் கடமையாற்றி வருகின்றனர்.

1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 32ஆம் பிரிவின்கீழ் அத்தியாயம் ஐஐஐஇன் 22ஆம் பிரிவிற்கு அமைய ஒப்பந்த நியமனங்கள் தவிர்ந்த மாகாண அரச சேவையின் ஏனைய பதவிகளுக்குரிய சகல நியமனங்களும், உரிய அங்கிரிக்கப்பட்ட சேவைப்பிரமாணங்களுக்கு, அல்லது அங்கிரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைவாக மாத்திரமே இத்தொழிலாளர்களின் நிரந்தர நியமனங்கள் மேற்கொள்ள முடியும், எனவும், அனைத்து வெற்றிடங்களுக்கும், வெளிவாரி விண்ணப்பதாரிளைக் கொண்டு ஆட்சேர்ப்பு சேர்ப்புத் திட்டத்திற்கமைவாக நியமன அதிகாரியினால் நிரந்தர நியமனம், செய்யப்படும் என மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் தகவல் உத்தியோகஸ்தர் தெரிவித்துள்ளார்.

சமையல் பொருட்கள் தொடக்கம் அதி சொகுசு வாகனங்கள் வரைக்கும் அதிக விலையேற்றம் தற்காலத்தில் காணப்படும் இந்நிலையில், அரசாங்க கடமைக்கு உட்வாங்கப்பட்டு 8 வருடங்களைக் கடந்தும் இதுவரையில் நிரந்தர நியமனமின்றி குறைந்த ஊதியத்திற்கு கூடிய வேலை செய்துவரும் இவ்வாறானவர்கள் எவ்வாறு தமது குடும்பத்தை மேற்கொண்டு செயது எனத் தெரியாது செயற்பட்டுவருகின்னர்.

அரசாங்கங்கள் காலத்திற்குக் காலம் மாறினாலும், அரச கொள்கைகளில் மாற்றமில்லாமல் செயற்படுவதற்கு இலங்கையில் வலுவான பிரகடனம் அல்லது சட்டவாக்கம் தேவை என்பது இதிலிருந்து புலப்படுபகின்றது. எனவே இவ்வாறு தமது வாழ்நாளை அரசசேவைகளுக்காக அற்பணித்து நாளாந்த வேதனத்தின்கீழ் கடமைபுரிந்துவரும் இந்தத் தொழிலாளர்களின் வாழ்விலும் வசந்தம் வீசுவதற்கு அவர்கள் எதிர்கார்த்திருக்கும் நிரந்தர நியமளத்தைப் பெற்றுக் கொடுக்க துறைசார்ந்தவர்கள் தீவிர முயற்சிஎடுக்க வேண்டும் என்பதுவே அவர்களின் கோரிக்கையாகும்.



வென்றெடுத்த உரிமைகளுக்கு

# வேட்டு வைப்பதா?

ரமேஸ் நந்தகுமார்



தென் இலங்கை வாழ் தமிழ் மக்களை தேசிய அபிவிருத்தி நீரோட்டத்திற்குள் கொண்டுவரும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களில் எல்லை மீள்நிர்ணயம் என்பது மிகமுக்கியமானது. தென் இலங்கையில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பல கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், உள்ளூராட்சி வட்டாரங்களின் எல்லைகள் அம்மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்படவில்லை என்றும் அவை மீள்நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டடு வந்தது.

நல்லாட்சி அரசு என்று சொல்லப்படுகின்ற ரணில், மைத்திரி அரசினை ஆட்சிக்கு கொண்டுவந்த சிறுபான்மை கட்சிகள் அவ்வாட்சிக் காலப்பகுதியில் பல கட்டமைப்பு மாற்றங்களை கொண்டுவந்தார்கள் என்பது மறுப்பதற்கில்லை.

2015 இல் தமிழ் முற்போக்கு கூட்டணியும் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகமும் இணைந்து எல்லை மீள்நிர்ணய பணிகளை மேற்கொள்ள புத்திஜீவிகள் குழுவொன்றினை அமைத்தது. அக்குழு தென்இலங்கையில் பலமாவட்டங்களுக்கு சென்று பலதரப்பட்ட பங்குதாரர்களுடன் கலந்துரையாடி ஒவ்வொரு மாவட்டத்திற்குமான ஆய்வறிக்கைகளை தயார்செய்தது.

தென்னிலங்கை மட்டுமல்லாமல் வடக்கு, கிழக்கில் மலையக மக்கள் செறிந்து வாழும் இடங்களையும் உள்ளடக்கிய ஆய்வறிக்கைகளை எல்லை மீள்நிர்ணய ஆணைக்குழு, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், பிரதமர், ஜனாதிபதி உட்பட ஐ.நா சிறுபான்மை உரிமைகளுக்கான அறிக்கையாளர் ரீட்டா ஐசக்கிடமும் கையளித்தது.


அறிக்கைகளை கையளித்து மட்டுமல்லாமல் அதனை வெற்றிகொள்ள தொடர்ச்சியான அழுத்தங்களைப் பிரயோகித்துக்கொண்டே வந்தனர். அதனடிப்படையில் உள்ளூராட்சி தேர்தல்களுக்கான வட்டாரங்கள் மீள்நிர்ணயம் செய்யப்பட்டு அதன் வர்த்தமானி 2017 பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதனால் உள்ளூராட்சி சபைகளில் தமிழ் பிரதிநிதிகளை பெற்றுக்கொள்ள முடிந்தது. பல உள்ளூராட்சி வட்டாரங்களில் தமிழ்மக்கள் அதிகமாக இருந்தும் தமிழ்மக்களின் வாக்குகள் நாலாபக்கம் சிதறடிக்கப்பட்டு பெரும்பான்மை வெற்றிபெற வழிவகுத்தது.


தமிழ் முற்போக்கு கூட்டணியின் கோரிக்கையானது நுவரெலியாவில் பிரதேச செயலகங்கள் 5 இலிருந்து 12 ஆகவும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 505 இலிருந்து 585 ஆகவும் கண்டியில் மேலதிகமான ஒரு பிரதேச சபை மற்றும் செயலகம் என மாவட்ட அடிப்படையில் அறிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அப்போதைய பா.உ மயில்வாகனம் திலகராஜ், 2016 பாராளுமன்றத்தில் பிரதேச செயலகங்களுக்காக பிரேரணையை சமர்ப்பித்தார். 12 அல்ல 15 ஆக அதிகரிக்க வேண்டும் என வலுவான நியாயபூர்வமான கோரிக்கையை முன்வைத்தார். 5 இலிருந்து 10 ஆக அதிகரிக்கமுடியும் என அப்போதையை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்த வஜிர அபயவர்தன ஏற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் அதனை சட்டரீதியாக அமல்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கிகாரமும் வழங்கப்பட்டது. அமைச்சர் தொட்டு, சட்டமா அதிபர் திணைக்களம் வரை தொடரச்சியாக அழுத்தம்கொடுத்து கடைசியாக 2019 ஒக்டோபர் 29 ஆம் திகதி இல. 2147/28 வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

இந்த வெற்றியென்பது வெறுமனே ஓரிரு மாதங்களில் வந்ததல்ல.



















இதன் வெற்றிக்காக பலர் பல மாதங்களாக, வருடங்களாக உழைத்திருக்கின்றனர் அத்தோடு ஆய்வுப்பணிகளுக்காக தங்களுடைய தனிப்பட்ட பணத்தையும் வழங்கியிருக்கின்றார்கள். இந்தச் செயற்றிட்டத்தின் ஆரம்பம் முதல் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவத்தின் பெ.முத்துலிங்கத்துடன் பங்களித்தவன் என்பதில் இதன் ஆழமும் அதன் முக்கியத்துவத்தையும் நன்கு அறிவேன்.

மேற்கூறிய மற்றும் கூறப்படாத பல பிரயத்தணங்களுக்கு மத்தியில் வென்றெடுக்கப்பட்ட 5 பிரதேச செயலங்கள் வர்த்தமானி அறிவித்தலின் பின்னரும் கூட காலந்தாழ்த்தப்பட்டு வந்தமையும் அதனை நடைமுறைக்கு கொண்டுவர அரசியல் பிரதிநிதிகள் குரல்கொடுக்காமை தன்சார் சமூகத்திற்கு இழைக்கும் துரோகமாக கருதலாம். ஆளும்கட்சி எதுவாகவேண்டுமாலும் இருக்கட்டும் கோரிக்கையை யார் வேண்டுமானாலும் முன்வைக்கட்டும் தமிழ்மக்களுக்காக போராடி வென்றெடுத்த உரிமைகளை ஆட்சி மற்றும் கட்சி சார்படிப்படையில் விட்டுக்கொடுப்பது நாகரிக அரசியலல்ல.

தற்போதைய அரசுடன் பலத்துடன் இருக்கும் இ.தொ.கா 5 பிரதேச செயலகங்களை நடைமுறைப்படுத்த முயற்சிசெய்திருக்கலாம். ஆனால் அதனை விடுத்து 5 பிரதேச செயலகங்களை அதிகரித்தல் என அமைச்சரவை அங்கிகாரம் வழங்கப்பட்ட வர்த்தமானி அறிக்கை வெளியிடப்பட்ட பின்னரும்கூட, அதனை உப-பிரதேச செயலகமாக ஏற்றுக்கொள்வதென்பது மேற்கூறிய சகல அர்ப்பணிப்புகளுக்கும் ஆப்புவைப்பது போன்றது.

உப பிரதேச செயலகங்கள் எனும் போது அதன் நிர்வாக அதிகாரங்கள், நிதிஒதுக்கீடுகள் என பல நன்மைகளை இழக்க நேரிடும். பிரதான செயலகங்களுக்கும் உப பிரதேச செயலகங்களுக்கும் வேறுபாடு உண்டு. தற்போதைய அரசு தமிழ்



மக்களுக்கு கிடைக்கவேண்டிய அரசசேவைகள் மற்றும் நிர்வாக சலுகைகளை கபடத்தனமாக தட்டிப்பறிக்கின்றது. அதனை புரிந்துகொள்ளும் பகுத்தறிவும் அரசியல் சாணக்கியமும் அற்ற பிரதிநிதிகளை கொண்டிருக்கின்றோம் என்பது வருத்தமளிக்கின்றது.

தற்போதைய அரசுடன் பலமாக இருக்கும் இ.தொ.கா இதனை மீள்பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நுவரெலிய மாவட்ட பிரதிநிதிகள் கட்சிபேதம் பாராது இதற்காக குரல்கொடுக்க வேண்டும். சிவில் சமூக அமைப்புகள், செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் இதனை கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வழிகோலவேண்டும். இ.தொ.கா வில் பிலிப், மதியுகராஜா ஆகியோர் எல்லைமீள்நிர்ணத்தில் அக்கறை கொண்டவர்கள். மாவட்ட செயலாளர் கூட்டத்தில் வட்டார எல்லைமீள்நிர்ணய பாரபட்சத்திற்காக கட்சிபேதம் பாறாது எங்களுடன் குரல்கொடுத்தவர்கள். மாகாண சபை கூட்டங்களிலும் இதுதொடர்பாக கதைத்திருக்கின்றார்கள். இந்தவிடயத்தில் அவர்களையும் சேர்த்துக்கொள்வது வலுச்சேர்க்கும்.

இதற்காக பாராளுமன்றத்தில் குரல்கொடுத்து அதன்வெற்றியில் பங்கெடுத்த மயில்வாகனம் திலகராஜ், இந்த அநீதிக்கெதிராய் பலதரப்பட்ட மட்டத்தில் செயற்படுகின்றமை பாராட்டத்தக்கது. இது தமிழ் மக்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமை. எனவே, அனைவரும் முன்வந்து பங்களிப்புசெய்வது அவர்களின் தார்மிக கடமையாகும்.



# பூநகரிக்கு ஏனிந்த தண்ணீர் பஞ்சம்?



சுப்பிரமணியம் பாஸ்கரன்

பெரும் கற்காலப் பண்பாட்டுக் காலம் தொடக்கம் மக்கள் வாழ்ந்து வருவதாக தொல்லியல் சான்றுகளுடன் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்ற மிகவும் தொன்மையான ஒரு பிரதேசமாக பூநகரிப் பிரதேசம் சிறப்புப் பெறுகின்றது.

பண்டைய காலத்தில் பூநகரியின் கரையோரப்பகுதிகளில் வர்த்தக தொடர்புகளுடன் மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள்.

இதைவிட, கரையோரம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் விவசாயத்தோடு பின்னிப்பிணைந்த மக்கள் சமூகமும் அங்கு வாழ்ந்ததாக வரலாறுகள் மூலம் அறியமுடிகின்றது. இது இன்றும் தொடர்ந்து, விவசாயத்தில் முதன்மையான பிரதேசமாக பூநகரிப் பிரதேசம் காணப்படுகின்றது.

இன்றும் பூநகரி பிரதேசத்தில் விளைவிக்கப்படுகின்ற பாரம்பரிய நெல்லின அரிசிகளுக்கு இலங்கையில்மட்டுமல்ல ஆசிய, ஐரோப்பிய நாடுகளிலும் குறையாத மதிப்புக் காணப்படுகின்றன.

இந்த நெல்லினங்கள், விவசாய நடவடிக்கைகள் நீர்ப்பாசன கட்டமைப்புகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பயிர்ச்செய்கைகள் அல்ல; மாறாக, மழையை நம்பி, வானம் பார்த்த பூமியாக (மானாவாரியாக) மேற்கொள்ளப்படுகின்ற ஒரு பயிர்ச்செய்கையின் மூலமே இந்த விவசாய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டன.

கடந்த காலங்களில் நிலவிய தொடர் யுத்தம், இடப்பெயர்வுகள் என்பவற்றால் பூநகரி கரையோரப் பிரதேசங்களில் காணப்பட்ட உவர்நீர்த் தடுப்பணைகள், சிறிய நீர்நிலைகள், சிறுகுளங்கள் சேதமடைந்ததன் விளைவாக, கடல் நீர் உட்புகுந்து, இப்பிரதேசத்தில் சுமார் ஆறாயிரம் ஏக்கர் பயிர் செய்கை நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளன.

இந்தப் பூநகரிப் பிரதேசத்தில் நீரிப்பாசன கட்டமைப்பின் மூலம், ஒரு பாரிய நீரத்தேக்கம் ஒன்றினை அமைக்கலாம் என்று 2012ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீரப்பாசனத் திணைக்களத்தால் பிள்ளையார் சுழிபோட்டப்பட்டாலும் அது எப்போது நிறைவேற்றப்படும் என்பது இந்த மக்களின் கேள்வியாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தைக் கடந்து செல்கின்ற மற்றும் அதிக நீர்வரத்தைக்கொண்ட கனகராயன்ஆறு போன்ற



பாரிய ஆறுகள் மறிக்கப்பட்டு, கிளிநொச்சியின் கிழக்குப் பிரதேசத்தில் இரணைமடுக்குளம், கல்மடுக்குளம், பிரமந்தனாறுக்குளம், கனகாம்பிகைக்குளம் போன்ற பாரிய குளங்கள் அமைந்துள்ளன.

இதேபோல, கிளிநொச்சியின் மேற்குப் பிரதேசத்தில் உள்ள பாரிய நீப்பாசனக் குளமாக அக்கராயன்குளமும் அதற்கு அடுத்தாற்போல் குடமுருட்டிக்குளம், கரியாலை நாகபடுவான்குளம், வன்னேரிக்குளம் போன்ற குளங்கள் அமைந்துள்ளன.

இந்தக் குளங்களுக்கு ஒப்பான பாரிய நீர்த்தேக்கம் ஒன்றை கிளிநொச்சியின் பூநகரிப் பிரதேசத்தில் அமைக்கலாம் என்ற யோசனைகள் முன்வைக்கப்பட்டு, இது தொடர்பான ஆய்வுகள் நீர்ப்பாசனத் திணைகளத்தின் ஊடாக கடந்த ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்டன.

அதாவது, பூநகரிப் பிரதேசத்திற்கு உட்பட்ட மாழாப்புக்குளம், கொக்குடையான் குளம், புத்தியற்ற மோட்டை, வெள்ளப்பள்ளம் முறியவிழுந்தான், கொக்குடையான், கல்லாய்குளம், களுவெளி உள்ளிட்ட சுமார் பத்துக்கும் மேற்பட்டசிறுசிறு குளங்களை உள்ளடக்கி, இக்குளத்தை அமைக்கலாம் என்றும் ஏற்கெனவே திட்டங்கள்வரையப்பட்டுள்ளன.

இலங்கையில் சுமார் 103 இற்கும் மேற்பட்ட ஆற்றுப்படுக்கைகள் காணப்படுகின்றன. இவற்றில் கனகராயன் ஆறு, மண்டைக்கல்லாறு, அக்கராயன் ஆறு உள்ளிட்ட ஏழு ஆறுகள், கிளிநொச்சி மாவட்டத்தின் கரையோரங்களில் சங்கமிக்கின்றன.

அக்கராயன் ஆற்றுக்கும் மண்டைக்கல்லாற்றிக்கும் இடைப்பட்ட பகுதியில் இக்குளம் அமைவதால் இவ்விரு ஆறுகளின் ஊடாக வருகின்ற நீர் மற்றும் இக்குளத்தின் மேற் பகுதிகளில் உள்ள பிரதேசங்களில் இருந்து வருகின்ற நீர் என்பவற்றால் இக்குளத்தின் நீர்வரத்து அதிகமாக இருக்கும். இதன் மூலம் பூநகரியில் உள்ள கிடத்தட்ட மூவாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் இருபோகங்களிலும் பயிர்செய்கை மேற்கொள்ளமுடியும்.

அத்துடன் அதிகளவான நீரேந்து பிரதேசமாகவும் அமையும் எனவும் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கின்ற இரணைமடுக்குளம், கல்மடுக்குளம், அக்கராயன்குளம் என்பவற்றை புனரமைப்பது அல்லது குளத்தின் அணைக்கட்டுகளை உயர்த்தி நீர்க்கொள்ளவை அதிகரித்தல் என்பதற்கு அப்பால், இவ்வாறு புதிய குளம் ஒன்றை அமைப்பது மிகக்கடினமாகும்.

அந்த அடிப்படையில் இந்தக்குளம் அமைய வேண்டும் என்ற ஆசையும் அவாவும் பூநகரிப் பிரதேச விவசாயிகளுக்கும் மக்களுக்கும் இருக்கின்றது என்பதை அவர்களினது கருத்துகளிலிருந்து அறியமுடிகின்றது.

அதாவது, பூநகரியில் இக்குளம் அமையுமானால் இங்குள்ள வளங்கள் சிறப்படையும். இன்று உவர் நீர்க்கிணறுகளாக இருக்கின்ற கிணறுகள், நன்னீராக மாற்றடையும். நல்ல மண் வளம் இருக்கின்றபோதும் நீர் வளம் இல்லாமையால் இரண்டு போகம் பயிர்செய்யமுடியாது.

மழையை நம்பிச்செய்யும் விவசாயம் மழைபொய்த்தால் அழிந்து விடும். அந்நேரத்தில் கால்நடைகளுக்குத் தேவையான தண்ணீர் கூடக் கிடைக்காத நிலை ஏற்படும். தற்போது எமது பிரதேசத்தில் குடிநீர் பாரிய பிரச்சினையாகி உள்ளது. முட்கொம்பனில் இருந்தும் கிளிநொச்சியில் இருந்தும்தான் பூநகரிக்கு குடிநீர் வருகின்றது

பூநகரி மண்ணானது, மனித சுவாத்தியத்துக்குச் சிறந்த மண்ணாக இருக்கின்ற போதும் இங்கு தண்ணீர ஒரு பிரச்சினையாக அமைந்துள்ளது. இந்தக்குளம் அமையப்பெறுமானால், பூநகரியின் தலைவிதியே மாற்றம் பெறும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வரலாற்றுதொன்மையும் பூர்வீகச்சிறப்புகளையும் தன்னகத்தே கொண்ட பூநகரிப் பிரதேசத்தின் வளத்தை பெருக்கும் வகையில், இக்குளம் அமையபபெற வேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும்.



# மகிமைகள் மங்கிவிட்ட கழுதைகள்





ரஸீன் ரஸ்மின்



கட்டிப்பிடிக்க
யாருமில்லை
அதனால் எட்டி
உதைத்து
என் கோபத்தை
வெளிப்படுத்துவேன்
என்ன செய்வது?...'

ஒரு கழுதை பற்றிய கவிதை இது. புதியது கிடைத்தால் பழையது மறந்து போகும் என்பார்கள் முன்னோர்கள்.

அவ்வாறுதான் இன்று கழுதைகள் தங்களது முக்கியத்துவத்தை இழந்து கட்டாக்காலியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

மனிதர்களின் நாகரிகம் ஆரம்பித்த காலம் முதல் மனித வாழ்வில் கழுதைகளின் வருகையும், அதனால் அவர்கள் பெற்ற உதவிகளும் சொல்லில் அடங்காதவை.

பொதிகளை சுமக்கவும், மருத்துவ தேவைகளுக்காகவும் இந்தக் கழுதைகள் பயன்படுத்தப்பட்டன. எனினும், புதிய நூற்றாண்டில் வாகனங்களின் பயன்பாடு அதிகரிக்கவே கழுதைகள் தங்களது முக்கியத்துவத்தை இழந்துவிட்டன எனக் கூறலாம்.

இன்று ஆடு, மாடு, கோழிகளை நமது வீட்டில் எப்படி சர்வ சாதாரணமாக வளர்த்து வருகிறோமோ அதுபோலத்தான் அன்று எமது முன்னோர்கள் கழுதைகளை வளர்த்து , பராமரித்து தங்களது தேவைகளை நிறைவேற்றி வந்துள்ளனர் என வரலாறு சாட்சி கூறுகிறது.

ஆனால், இன்று கழுதைகளை அபூர்வமாக பார்க்கும் அளவுக்கு அதனுடைய மகிமையும், பெருக்கமும் வெகுவாக மங்கிவிட்டது.

இன்று இலங்கையில் காணப்படும் கழுதைகளானது எகிப்து நாட்டைச் சேர்ந்த அட்லஸ், ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த சோமாலிய கழுதைகள் மற்றும் சிரியா நாட்டைச் சார்ந்த கழுதைகள் இனங்களாக அறியப்படுகிறது.

இலங்கையில் பேச்சுவழக்கில் 'பூரூவா' 'கழுதை' என்பார்கள். இவ்வாறு சொல்லி அழைப்பதை நம்மில் பெரும்பாலானோர் இழிசொல்லாகவே பார்க்கிறார்கள்.

உண்மையில் கழுதைகள் ஏனைய விலங்குகளை விட வித்தியாசமானவை. இலங்கையில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, புத்தளம் (கற்பிட்டி) ஆகிய பகுதிகளில்தான் கழுதைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

புத்தளம் கற்பிட்டி என்றாலே கருவாடுகளும் கழுதைகளும்தான் எல்லோருக்கும் ஞாபத்தில் வரும். முன்பை விட இப்பொழுது கற்பிட்டியில் கழுதைகள் குறைவாகவே காணப்படுகின்றன.

கற்பிட்டி பகுதியில் முன்னர் அதிகமான கழுதைகள் வாழ்ந்தமைக்கான நிறைய ஆதாரங்கள் காணப்படுகின்றன. இப்போது விரல்விட்டு எண்ணும் அளவுக்குத்தான் கழுதைகள் காணப்படுவதாக அந்தப் பகுதியில் வாழும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

“முஹைதீன் காக்காவுக்குப் பிறகு இந்த பகுதியில் யாரும் கழுதைகளை பராமரித்ததை தாங்கள் காணவில்லை. இன்று கழுதைகள் அனாதைகளாக அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றன. அதுவும் ஒரு மிருகம்தானே! கழுதைகளிடம் ஒரு குணம் உள்ளது. நன்றாகப் பழகிவிட்டால் பக்கத்திலேயே நின்றுகொண்டிருக்கும். நாம் கொடுக்கும் சாப்பாடுகளை சாப்பிடும்” என்கிறார்கள்.

முஹைதீன் காக்கா கழுதையை வண்டில் ஒன்றில் பூட்டி தனது சொந்த தேவைகளையும் நிறைவேற்றி வந்தார். அவர்களின் மறைவிற்கு பின் இங்கு கழுதைகளை யாரும் பராமரிக்கவில்லை. அங்குமிங்கும் கட்டாக்காலியாகவே சுற்றித் திரிந்தன.

வீடுகளுங்கு வந்தால் மாத்திரம் மக்கள் அவற்றுக்கு உணவு கொடுப்பார்கள் அதனால் மக்களுக்கு எந்த இடையூறுகளும் இல்லை. வீட்டில் ஆடு, மாடு, கோழிகளை வளர்த்து சாப்பாடு கொடுப்பதைப் போலவே கட்டாக்காலிகளாக சுற்றித் திரியும் கழுமைகளுக்கும் மக்கள் சாப்பாடுகளை கொடுத்து பராமரித்து வருகின்றனர்.

கழுதைகள் எதையும் சாப்பிடும். விவசாயத்திற்கோ, மீன்பிடித் தொழிலுக்கோ எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. ஆனால், முருங்கை மரத்தை மாத்திரம் கழுதைகள் விட்டு வைக்காது. மரத்தோடே சாப்பிட்டு விடும். அதனால்தான் முருங்கை மரம் உள்ள வீடுகளில் மாத்திரம் கழுதைகள் உள்நுழைய விடமாட்டார்கள்.

அத்துடன், கழுதைகள் எப்போதும் கூட்டமாகவே திரியும். களி மற்றும் உப்புத் தன்மை கொண்ட மண்ணில்தான் (உவர் மண்) கழுதைகள் தங்கும். காலையில் பிரிந்து பிரிந்து சென்றுவிடுகின்ற கழுதைகள் மாலையானதும் கற்பிட்டியில் உள்ள இரண்டு தரவைகளில் இரவு நேரத்தில் அடைந்து விடுகின்றன.

அத்தோடு முறையான பராமரிப்பு இன்றி பல கழுதைகள் வீதி விபத்துகள், நோய் என்றும் உயிரிழந்துள்ளன என்று மக்கள் கழுதை பற்றி விவரத்தை தந்தனர்.

கழுதைப் பால் மருத்துவ தேவைக்கு பயன்படுத்தப்படுகிறது என சொல்லப்படுகிறது. அப்படியானால், அந்தக் காலத்தில் புற்றுநோய், தொண்டைக் கழலை, சளித்தொல்லை போன்ற நோய்களை குணப்படுத்துவதற்கு அப்போது பெறப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது அவ்வாறு எந்த மருத்துவ தேவைகளுக்கும் கழுதைப் பால் எடுக்கப்படுவதில்லை.

கழுதை ஒரு பாலூட்டி இனத்தைச் சேர்ந்த தாவர உண்ணி விலங்காகும். இது குதிரை இனத்தைச் சேர்ந்தது. பாலூட்டிகளில் குதிரை, வரிக்குதிரையைப் போல ஒற்றைப்படைக் குளம்பிகள் வரிசையைச் சேர்ந்த ஒரு விலங்கினம். முகத்தில் மூக்கின் அருகே வெண்மையாக இருப்பது இதன் அடையாளங்களில் ஒன்று.

கழுதை சகிப்புத்தன்மைக்குப் பெயர் பெற்றது. கழுதைகளின் தாக்குப்பிடிக்கும் திறன் அதிகம். எனவே இவை கரடுமுரடான பகுதிகளில் மிகுந்த பாரம் தூக்கிச் செல்ல பயன்படுத்தப்படுகின்றன. கற்பிட்டி பகுதியிலும் ஆடைகளை கழுவும் தொழிலில் ஈடுபட்டவர்களே இதனை தமது வாகனமாக பயன்படுத்தியுள்ளனர்.

மீன்பிடித்தொழிலுக்குச் செல்ல ஆயத்தமான சபருள்ளாவை, கற்பிட்டி ஆணவாசல கடற்கரையோரத்தில் சந்தித்தபோது, “என்னுடைய அப்பப்பா (சேகாலியப்பா) இந்தியாவைச் சேர்ந்தவர். இவர் வர்த்தக நோக்கத்துக்காக மரைக்கார் மார்களுடன் இலங்கைக்கு வந்துள்ளார்.

அப்போது, ஆடைகளை கழுவும் வண்ணார்மார் கற்பிட்டி பகுதிகளில் குளங்களை உருவாக்கி, இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கழுதைகளை தமது போக்குவரத்து தேவைகளுக்காக பயன்படுத்திக் கொண்டிருந்தார்களாம்.

ஆடு, மாடுகளை வளர்த்தால் அதனை விற்பனை செய்ய முடியும்; நல்ல வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும். அதுபோல கழுதைகளை வளர்த்தால் பிரயோசனம் ஏதும் கிடைக்காதே என்ற நினைப்பில், மக்கள் கழுதை வளர்ப்பில் ஈடுபடுவதில்லை” என்றார் சபருள்ளா.

கச்சான் காற்று பருவம்தான் கழுதைகளின் இனப் பெருக்கத்திற்கு உகந்த காலமாகும். அப்போது, கழுதைகளை பராமரிப்பவர்கள் ஜாக் எனும் ஆண் கழுதைகளையும், ஜென்னி எனும் பெண் கழுதைகளையும் குளிப்பாட்டி, பொட்டு வைத்து சுத்தமாக வைத்திருப்பார்கள்.

ஆண் கழுதையும் பெண் கழுதையும் இந்தக் காலத்தில் ஒன்று சேர்ந்து, தங்களது இனத்தைப் பெருக்கிக் கொள்கின்றன. கழுதைகளின் மூல இருப்பிடம் ஆபிரிக்க பாலைவனம் என்று சொல்லப்படுகிறது. சாதாரண கழுதைகளை மூன்றாகப் பிரிக்கலாம்.

“கழுதைகள் மிகவும் புத்திச்சாலித்தனமான, வலிமை கொண்ட விலங்கினம். நல்ல ஞாபக சக்தி கொண்டவை. சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த இடங்களையும் மிகவும் சுலபமாக கழுதைகள் கண்டுபிடித்து விடுகின்றன.

படிக்காத அல்லது சிந்திக்கத் தெரியாத பிள்ளைகளைப் பார்த்து நம்மில் பலர் 'கழுதை' என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம் . ஆனால், கழுதைகளின் குணாதிசயங்களை அறிந்துகொண்ட பின்னரும் மனிதர்களுக்கு 'கழுதை' என்று திட்டுவது கழுதை இனத்தை மலினப்படுத்துவதாக இருக்கிறது” என்று மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் உள்ள கழுதைகள் குறிப்பிட்ட இடங்களில் இருப்பதால் அந்தக் கழுதைகளை உரிய முறையில் பராமரிக்க வேண்டிய தேவை உள்ளது.


கற்பிட்டி பகுதியில் இன்று நூறுக்கும் குறைந்த அளவில்தான் கழுதைகள் இருப்பதாக அறியமுடிகிறது. அந்தக் கழுதைகளை உரிய முறையில் பராமரிக்காததால் வீதி விபத்துகளில் மனிதர்களும் கழுதைகளும் உயிரிழக்க வேண்டியதாகி விடுகிறது.

சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வந்து போகும் கற்பிட்டி பகுதியில் கழுதைகளின் சரணாலயம் ஒன்றை அமைப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் கற்பிட்டி பிரதேச சபை கடந்த வருடம் நடவடிக்கை எடுத்தது.

ஆனால் அந்த முயற்சிகள் தற்போது கிடப்பில் போடப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. கற்பிட்டி கழுதைகள் இந்த நாட்டுக்கு சொந்தமான மிருகங்கள் என்பதால் அவற்றைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது.

சுற்றுலா பகுதியாக காணப்படுகின்ற கற்பிட்டி பிரதேசத்திற்கு வருகை தருகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் ஒருகணம் நின்று இந்தக் கழுதைகளை வியப்புடன் பார்த்துவிட்டுதான் செல்கிறார்கள்.

கற்பிட்டி பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்காக பார்த்து பார்த்து அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கின்ற அரசாங்கமும், கற்பிட்டி பிரதேச சபையும், கற்பிட்டி மண்ணுடன் நீண்டகால தொடர்பு கொண்டிருக்கும் கழுதைகளை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இது மக்களின் எதிர்பார்ப்புமாகும்.


விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா

வரலாற்றில் இடம்பிடித்த

# சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம்



## 125ஆவது ஆண்டுவிழா: ஓராண்டு தொடர் விழா இன்று ஆரம்பம்

உலகளாவியரீதியில் ஜீவசேவையாற்றிவரும் ஸ்ரீ இராமகிருஸ்ணமிஷனை ஸ்தாபித்த வீரத்துறவி வங்கத்தின்சிங்கம் சுவாமி விவேகானந்தர் இலங்கைத் திருநாட்டிற்கு வருகை தந்து இன்றுடன்(15) 125 ஆண்டுகளாகின்றன.

சுவாமி விவேகானந்தர் 1897ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி வருகை தந்திருந்தார். அவர் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, அநுராதபுரம், மாத்தளை போன்ற நகரங்களுக்கு விஜயம் செய்து 11 நாள்கள் தங்கியிருந்தார்.

இதனையொட்டி இலங்கை இராமகிருஸ்ணமிஷன், கொழும்பு தொடக்கம் மட்டக்களப்பு, காரைதீவு ஈறாக பல இடங்களில் நினைவுதின விழாக்களை ஏற்பாடு செய்துள்ளது. இவ்விழாக்களுடன் ஓராண்டு காலத்துக்கு அதாவது அடுத்த ஆண்டு (2023) ஜனவரி மாதம் 15ஆம் திகதி வரை பலவித நிகழ்ச்சிகளை கிரமமாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

> **அக்கட்டடம் இரத்தினசபாபதி என்பவருக்கு சொந்தமானது. இக்காலத்தில் விவேகானந்தா லொட்ஜ் எனும் பெயரால் அழைக்கப்படுகின்றது**

1893ஆம் ஆண்டு மே மாதம், சுவாமி விவேகானந்தரின் மேலைத்தேய பயணத்தின் போது, அவர் பயணம் செய்த நீராவிக் கப்பல், இலங்கை துறைமுகத்தில் ஒருநாள் நிற்கவேண்டி ஏற்பட்டது. அன்று, சுவாமி கொழும்பு, களனிப் பகுதியில்உள்ள புத்தராலயம் ஒன்றைப் பார்வையிட்டார்.

மீண்டும், 1897 தை மாதம், மேலைத்தேய பயணத்தை முடித்துவிட்டு இந்தியா திரும்பும் வழியில் கொழும்புக்கு வந்தார். அன்றைய தினத்தையே ஆதாரபூர்வமாக சுவாமிஜீ இலங்கைக்கு வந்த தினமாக குறிப்பிடலாம். இலங்கையில் அந்த மகானுக்கு மகத்தான வரவேற்பு நடைபெற்றது. இந்துமத ஆர்வலர்கள் ஏற்பாடுகளைத் தயார் செய்தனர். செலவுக்காக சில பரோபகாரிகளிடமிருந்து சிறு தொகை பணமும் புரட்டப்பட்டது. (800 ரூபாய் இலங்கை பணம்) வரவேற்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை கலந்து ஆலோசிக்க இந்து மத அபிமானிகள் 'தம்பையா சத்திரம்' எனும் மண்டபத்தில் கூடி முடிவுகள் எடுத்தனர்.

இலங்கை சட்டசபை உறுப்பினர் பி. குமாரசுவாமித்துரை தலைமையில் அருனாச்சலம், தம்பையா ஆகியோரும் சுவாமிஜீயை வரவேற்க துறைமுகத்துக்கு வந்திருந்தனர். தை மாதம் 15ஆம் திகதி சரியாக மாலை 6 மணிக்கு சுவாமிஜீயை ஏற்றி வந்த கப்பல், கொழும்பு துறைமுகத்தில் நங்கூரம் இட்டது. சுவாமிஜீ மணம்கமழ் மாலை அணிவிக்கப்பட்ட பின் அழகிய இரு குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் கறுவாதோட்டத்தின் புதிதாக அமைப்பட்டிருந்த மாளிகைக்கு அழைத்து செல்லப்பட்டார். அக்கட்டடம் இரத்தினசபாபதி என்பவருக்கு சொந்தமானது. இக்காலத்தில் விவேகானந்தா லொட்ஜ் எனும் பெயரால் அழைக்கப்படுகின்றது.

இலங்கைப் பத்திரிகைகளான 'சிலோன் ஒப சேவர்', 'த சிலோன் இன்டிபெண்டன்ற்' ஆகிய பத்திரிக்கைகள் சுவாமி விவேகானந்தரின் வருகையை பிரசுரித்தன.

ஊர்வலம் சுவாமிஜீ தங்குமிடத்தையடைந்ததும் அங்கு தோட்ட வாயிலில் வட்டமாக கதிரைகள் அடுக்கப்பட்டிருந்தன. அங்கு மலர்கள் தூவி வரவேற்கப்பட சுவாமிஜீயும் கூட வந்தவர்களும் அமர்ந்தனர். எங்கும் ஒரே அமைதி. அமைதியை தொடர்ந்து வயலினின் மெல்லிய இசையுடன் இந்துமத நாகரிக அடிப்படையில் பாரம்பரிய பதிகங்கள் பாடப்பட்டன.

தொடர்ந்து குமாரசுவாமி இந்துப் பாரம்பரிய முறையில் சுவாமியவர்களை பணிவுடன் நமஸ்கரித்து, இலங்கை வாழ் இந்துக்கள் சார்பாக அன்பான வரவேற்பு பத்திரத்தை வாசித்தார். அதற்கு சுவாமிஜீ மக்கள் மகிழ்ச்சியடையும் படியாக தன் இனிய குரலால் ஏற்புரை நல்கினார். அவரது இனிய குரலால் எளிமையான சொற்களால் ஏற்புரை கூறி முடிக்கும் போது மக்கள் உணர்ச்சிவசப்பட்டு 'ஜெய ஜெய மாகதேவா' எனக் கோசம் எழுப்பினர். தொடர்ந்து சுவாமிஜீயின் பிராத்தனையுடன் பன்னீர் தெளித்து அன்றைய கூட்டம் நிறைவுற்றது. மக்கள் கூட்டம் பிரிய மனமில்லாது நின்றனர். ஆயினும் சுவாமிஜீ அவர்களிடமிருந்து விடைபெற்றார்.

மறுநாள் 16ஆம் திகதி மாலை சுவாமிஜீ தன் முதலாவது சொற்பொழிவை 'இந்தியா ஓர் புண்ணிய பூமி' எனும் தலைப்பில் நிகழ்த்தினார்.

17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, பகல் முழுவதும் சுவாமிஜீ மக்களோடு உரையாடினார். மாலை தலைநகரில் உள்ள கொச்சிகடை பொன்னம்பலவானேஸ்வரர் கோவிலுக்குச் சென்றார். அங்கும் செல்லும் வழியெல்லாம் பூரணகும்பம் வைக்கப்பட்டிருந்தது. இலங்கை நாட்டின் வழக்கப்படி வாயிற் படிகளில் பழங்களை அலங்காரமாக வைத்து தீபமேற்றியிருந்தனர். கோவிலுக்குள் சுவாமிஜீ 'ஜய் மகாதேவா' என்ற கோஷத்துடன் வரவேற்கப்பட்டார். பின்பு தன் தங்குமிடத்திற்குச் சென்றும் கூட இரவு இரண்டரை மணிவரை இலங்கை பக்தர்களுடன் கலந்துரையாடினார். அவர்களுள் அந்தணர்களும் அடங்கியிருந்தனர்.

மறுநாள் 18ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் சுவாமிஜீ ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பக்தரான செல்லையாவின் வீட்டிற்கு வந்தார். அங்கும் சுவாமிஜீயை வரவேற்குமுகமாக கலையம்சத்தோடு கூடிய அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. பூக்கள் தூவப்பட்டு வரவேற்கப்பட்ட சுவாமிஜீயின் இருக்கையில் வெல்வெட் துணியால் மூடப்பட்டு, இந்துக்களால் மேலாக மதிக்கப்படும் தர்ப்பை புல் இருக்கை போடப்பட்டிருந்தது. சுவாமி புனித கங்கை நீரும் பன்னீரும் தெளித்து வரவேற்கப்பட்டார். சுவாமிஜீயும் பக்தர்களுக்கு விபூதி பிரசாதத்தினை அளித்தார்.

> **யாழ்ப்பாணத்து ஊர்வலத்தில், யோகர் சுவாமிகள், சுவாமி விவேகானந்தர் வந்த கோச் வண்டியை தேர் வடம் இழுப்பது போல தானும் ஓர் ஓரமாக வண்டியை பற்றிக் கொண்டு வந்ததாக பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தர் குறிப்பிட்டுள்ளார்**

ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கூட்டத்தைக் கடந்து மண்டபத்துட் சென்றார். சுவாமிஜீயின் இருக்கைக்கு எதிரே பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருவுருவப் படம் சுவரில் மாட்டப்பட்டிருந்தது. அதனைக் கண்ட சுவாமிஜீ தன் குருநாதரின் படத்தின் முன்பாக சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினர். அன்று முதல் சீடரால் குருவின் பெருமை இலங்கையிலும் பரவத் தொடங்கியது. செல்லையா அவர்களது இடம் சாதுக்கள் தங்குவதற்கு பொருத்தமானது என்பதையும் சுவாமிஜீ சுட்டிக்காட்டினார். பின் தேவார பாராயணத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.


நான்கு நாள்கள் கொழும்பு நகரில் மிகவும் உற்சாகமாக பொழுதை கழித்த சுவாமிஜீ ஐந்தாம் நாளான 19. 01. 1897அன்று காலையில் கண்டி நகருக்குப் புறப்பட்டார். கண்டி ரயில் நிலையத்தில் சுவாமிஜீயை வரவேற்பதற்காக பெருந்திரளான மக்கள் கூட்டம், இந்திய பண்பாட்டு வாத்திய குழுவுடன் காத்திருந்தது. அங்கும் சிறப்பான ஊர்வலத்துடன் சுவாமி, அவர் தங்கியிருக்க ஒழுங்கு செய்யப்பட்ட பங்களாவை நோக்கி பயணமானார். அங்கும் சுவாமிஜீக்கு வரவேற்புரை வாசிக்கப்பட்டது.

கண்டியிலிருந்து அன்று மாலையே சுவாமிஜீ மாத்தளை நோக்கி புறப்பட்டார். அங்கே இரவு பொழுதை கழித்துவிட்டு மறுநாள் காலை (20ஆம் திகதி புதன்கிழமை) 200 மைல் தொலை தூரம் உள்ள யாழ்ப்பாணம் நோக்கி பயணம் தொடங்கியது. கோச்சு வண்டி பயணம் சுவாமிஜீக்கு பெரும் சிரமமாக இருந்தது. (கோச்சு வண்டி - குதிரை வண்டி) கரடுமுரடான பாதையின் வழியாக செல்லும் போது சுவாமிஜீ பயணம் செய்த வண்டியின் சில் ஓட முடியாது ஆட்டம் கண்டது. எதிர்பார்க்கப்பட்ட நேரத்தைவிட காலதாமதமாகவே அநுராதபுரத்தை அடைந்தனர்.

அங்கு ஓர் அரச மர நிழலில் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் மதிக்கத்தக்க எண்ணிக்கையான மக்கள் கூடினர். அவர்கட்கு சுவாமிஜீ 'வழிபாடு' என்பது பற்றி ஒரு சிற்றுரை ஆற்றினார். தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் உரையை மொழி பெயர்த்தனர். அநுராதபுரத்தில் இருந்து புறப்பட்ட சுவாமிஜீ அடுத்து வந்து வவுனியாவில் இளைப்பாற முடிந்தது. பிரயாணக் களைப்பும் இரு இரவுகளின் தூக்கமின்மையும் சுவாமியின் உடலை சோர்வடையச் செய்தன. வவுனியாவில் மக்கள் அளித்த வரவேற்புக்கு சுவாமிஜீ மிக எளிய முறையில் சுருக்கமாக ஏற்புரை வழங்கி விட்டு காட்டுப்பாதை வழியே யாழ்பாணம் நோக்கிய பயணம் ஆரம்பமாகியது.

யாழ்ப்பான எல்லைக்கு 12 மைல்கள் முன்னதாகவே தன் அன்பின் வெளிப்பாட்டால் மக்கள் சுவாமிஜீயை வரவேற்க தொடங்கினர். யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு வீதிகளும் ஒவ்வொரு வீடுகளுமே பண்டிகைக் கோலம் பூண்டது.



மேள வாத்திய கோஷங்கள் நாற்றிசையும் முழங்கின. தீவர்த்திகள் இருளை ஓடச் செய்தன. இரு குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் சுவாமிஜீ அழைத்துவரப்பட்டார். 24ஆம் திகதி மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சுவாமிஜீக்கு விழா எடுக்க ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. பெரியகடை முதல் இந்துக் கல்லூரி வரை செய்யப்பட்டிருந்த வீதி அலங்கார அழகை வர்ணிக்க முடியாது.

> **இலங்கை இந்து பக்தர்கள் நடந்து கொண்ட விதம் அவர் மனதைத் தொட்டது. இந்த ஒரு வார காலத்தில் ஈழப் பெருமக்களும் வேதாந்த சிறப்பில் மனம் திறக்கப்பட்டனர். சுவாமிஜீயின் ஒரு வாரகால விஜயமே ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் இலங்கையில் தடம் பதிப்பதற்கு அடிநாதமாக இருந்தது**

வீதியின் இருமருங்கிலும் தோரணங்கள் வீட்டு வாசல்களில் பூரண கும்பங்கள் எல்லா இடங்களிலும் சுவாமிஜீயை வரவேற்று தீபம் காட்டி சுகந்த தூபமிட்டனர். 15 000 க்கும் மேற்பட்ட மக்களின் ஊர்வலம். ஊர்வலத்தில் கலந்து கொண்ட எவரும் காலில் செருப்பு அணியவில்லை. சரியாக ஏழு மணிக்கு சுவாமி அவர்கள் தம் பக்தர்களுடன் அங்கு அமைக்கப்பட்டிருந்த அலங்கார சிம்மாசனத்தில் அமர்ந்தார். அருகில் அவர் சீடர்கள் இருமருங்கிலும் அமர்ந்திருந்தனர். ஸ்ரீ.அ.சபாபதிப்பிள்ளை வரவேற்புப் பத்திரத்தை வாசித்தார்.

தொடர்ந்து சுவாமி அவர்களின் சொற்பொழிவு இடம்பெற்றது. சமயப்பற்று, நாட்டுப்பற்று ஆகிய இரண்டையும் தன் ஒரு மணி 40 நிமிட சொற்பொழிவில் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணத்து ஊர்வலத்தில் மேலும் குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில், யோகர் சுவாமிகள், சுவாமி விவேகானந்தர் வந்த கோச் வண்டியை தேர் வடம் இழுப்பது போல தானும் ஓர் ஓரமாக வண்டியை பற்றிக் கொண்டு வந்ததாக பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தர் தன் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் யாழ்ப்பான விஜயத்தை முடிக்கும் முன் ஈஸ்வரன் கோயிலையும் கார்த்திகேயன் கோயிலையும் தரிசித்தார். அவ்வாலயங்களில் இலங்கை இந்து பக்தர்கள் நடந்து கொண்ட விதம் அதாவது பக்திப் பரவசமும் ஒழுங்கும் அவர் மனதைத் தொட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னுமோர் இடத்தில் இலங்கை இந்துக்கள் சாதுக்களை மதிக்கும் பணிவினையும் குறிப்பிட்டுள்ளமை நோக்கக் கூடியது. அதேபோல அந்த ஒரு வார காலத்தில் ஈழப் பெருமக்களும் வேதாந்த சிறப்பில் மனம் திறக்கப்பட்டனர். சுவாமிஜீயின் ஒரு வாரகால விஜயமே ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் இலங்கையில் தடம் பதிப்பதற்கு அடிநாதமாக இருந்தது என்பதையும் உணர முடிகின்றது.

26ஆம் திகதி தை மாதம் 1897 ஆம் ஆண்டில் சுவாமிஜீ மீண்டும் இந்தியா செல்வதற்காக இரவு ஒரு மணியளவில் அங்கிருந்து புறப்பட்டார் (மூன்று இரவுகளும் இரண்டு பகல் பொழுதும் அவர் அலை கடலில் கழித்ததாக கூறப்படுகின்றது.) கொழும்பு துறைமுகத்திலிருந்து பாம்பன் அணை மறு கரையை (ராமேஸ்வரத்தை) அடைய நான்கு நாள்கள் பயணிக்க வேண்டியதாயிற்று.

1899 இல் சுவாமிஜீ மீண்டும் மேற்கு நாடுகளுக்கும் செல்லும் வழியில் ஒரு நாள் கொழும்பில் அவர் திருப்பாதங்களை பதித்தார் அது 1899 ஆம் ஆண்டு ஆனி மாதம் 28ஆம் திகதி ஆகும். அன்று அவர் தன் பழைய நண்பர்களை சந்தித்து உரையாடும் நாளாகவே அமைந்தது. கொழும்பு நண்பர்கள் சுவாமியை இலங்கை துறைமுகத்தில் தரை இறங்குவதற்கான அனுமதியை பெற்றிருந்தனர். பி.முத்துக்குமாரசுவாமியும் அவர் தன் மனைவி மகனுடன் சுவாமியை தரிசிக்க வந்திருந்தனர்.

சுவாமிஜீ தகுந்த மரியாதைகளுடன் வாத்தியங்களோடு தோட்டத்தில் உள்ள இந்து வாலிபர் சங்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். நூற்றுக்கணக்கானோர் அம் மகானை தரிசிக்க ஆவலுடன் குழுமினர். அவர் இம்முறை லண்டனுக்கு செல்வதற்காக ஆங்கில உடை அணிந்திருந்தார். ஆனாலும் இலங்கை மக்கள் சுவாமிஜீக்கு அதே மரியாதை, அதே உபசரிப்பு, வணக்கம் எல்லாவற்றையும் அன்போடு செய்தனர். பழங்களும் தெங்கு இளநீரை அளித்து விருந்தோம்பினர்.

சகோதரி நிவேதிதா அவருடன் சென்றிருந்தார். சுவாமிக்கு கிடைத்த வரவேறபையும் பிரியாவிடையையும் மெச்சித் தன் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். 'பக்தி பரவசத்துடன் மக்கள் கூட்டம் சுவாமிஜீயில் விழி பதித்திருந்தனர்.' என்றும் குறிப்பிடுகின்றார். அன்றே சுவாமிஜீ தன் மேலைத்தேய பயணத்தைத் தொடர்ந்தார். இலங்கை மக்கள் உணர்ச்சி வசமாக சுவாமிகளுக்கு விடை கொடுத்தனர்.

அதுவே சுவாமிஜீயின் இலங்கைக்கான இறுதி யாத்திரை ஆகவும் அமைந்துவிட்டது. அதன்பின் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர் சுவாமிஜீயின் வருகையை தொடர்ந்து இலங்கைக்கு வந்தனர். அவர்களின் வருகையால் ராமகிருஷ்ண இயக்கம் இன்றுவரை உயிர்ப்புடன் இயங்குகிறது.



# ஆட்சியாளர்களை மட்டும் குற்றம் சொல்லிப் பயனில்லை...

இலங்கையில் இனம், மதம், மொழி என்ற வேறுபாடின்றி சகல இன மக்களும் அனுபவிக்கும் நெருக்கடிகளுக்கும் இன்னல்களுக்கும் தீர்வைக் காணவேண்டிய கடப்பாடுடைய அரசாங்கம், அவற்றுக்கு காலத்தை இழுத்தடித்து, சாக்குப்போக்குகள் கூறிவருவதைப் பார்த்தால், அரசாங்கம் மக்களை எந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கின்றது எனக் கேட்கத்தோன்றுகின்றது?

மக்கள் அனுபவிக்கும் பெரும் கஷ்டங்கள் முடிவின்றித் தொடர்வதே, எதிர்காலம் குறித்த பெரும் பயத்தை ஒவ்வோர் இலங்கைப் பிரஜையிடத்திலும் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, 20 - 35 வயதுடைய இளம்சமுதாயம், 'இந்த நாட்டில் இனி வாழ முடியாது; எங்கேயாவது ஓடித்தப்பி விடுவோம்' என்ற மனநிலையில், சந்தர்ப்பங்களை நாடித்தேடி ஓடிக்கொண்டிருக்கின்றார்கள்.

அமைச்சர்களும் ஆளும்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும், "பொருட்களின் தற்போதைய விலையேற்றங்களும் தட்டுப்பாடுகளும் தற்காலிகமானவை; இவற்றில் இருந்து விரைவில் வெளியேறிவிடுவோம். இந்த நிலை கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்டது" என்றவாறாக மக்கள் மத்தியில் உரையாற்றி வருகின்றார்கள்.

ஆனால், எந்த வகையிலும் பொதுமக்களின் மனங்கள் மகிழும் படியான எந்தத் தீர்வையும் அரசாங்கம் இதுவரையில் முன்வைக்கவில்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரச்சினை, மக்களை நெருக்கடிக்கு உட்படுத்தியவாறே இருக்கின்றன.

அரசாங்கம் சரியான முடிவுகளை எடுத்து, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்கின்றதா என்ற சந்தேகம், உருவாகும் வகையில்தான் அரசாங்கத்தின் நடத்தைகள் காணப்படுகின்றன.

அதற்கு முக்கிய காரணமாகக் காணப்படுவது, தலைமைத்துவங்கள் சிறந்ததும் சரியானதுமான முடிவுகளை எடுக்காமையாகும். அவ்வாறு எடுக்கும்போதே பயணமும் சிறப்பாகவும் சேரவேண்டிய இடத்தையும் போய்ச்சேரும்.

சுத்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் வரலாற்றைப் பார்த்தால், எந்தக் கட்டத்திலும் தீர்க்கதரிசனத்துடன் கூடியவாறான முடிவுகளை எடுத்து, நாட்டை முன்னோக்கி நகர்த்திய சந்தர்ப்பங்கள் வெகுகுறைவு; அல்லது இல்லை என்றே சொல்லிக்கொள்ளலாம்.

மக்கள் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கும் முதன்மையான நெருக்கடிகளான பொருட்களின் விலையேற்றம், தட்டுப்பாடு, வெளியில் நடமாடுவதில் அச்சம், கொலைகள், கொள்ளைகள், ரௌடி குழுக்களின் அட்டகாசங்கள், ஊழல்கள், மோசடிகள் என்று இவை யாவுமே இலங்கையின் முதன்மையான நோயின் அறிகுறிகள் ஆகும்.

இலங்கையின் மிகவேதனைக்குரிய ஆபத்தான நோயாக இருப்பது இனப்பிரச்சினையாகும். இந்த நோய்க்குத் தீர்வு காணும் போது, நோயின் அறிகுறிகள் படிப்படியாகக் குணமாகிவிடும்.

ஆனால், பிரதான நோய்க்கும் மருந்திடாமல், நோயின் அறிகுறிகளுக்கும் வலிநிவாரணம் வழங்காமல் நோயாளிகளை வதைக்கும் நிலையிலேயே இலங்கை உள்ளது. "நான் இலங்கையின் குடிமகன்" என்று கூறி பெருமைப்பட்ட காலம்போய், சிறுமைப்படும் நிலைக்கு ஆட்சியாளர்கள் இலங்கை மக்களைக் கொண்டுவந்து நிறுத்தியுள்ளார்கள்.

இந்நிலைக்கு ஆட்சியாளர்களை மட்டும் குற்றம் சொல்லிப் பயன்இல்லை. அவர்களைத் தெரிவு செய்த மக்கள்தான் முதன்மையான காரணகர்த்தாக்கள் என்பதை மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

இதுதான் எனது வாழ்க்கை எனச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் அதை எப்படி மேலும் மெருகேற்றுவது என்பதைப் பற்றியும் அவதானங்களைக் கூர்மைப்படுத்த வேண்டும் என்பதை உணர வேண்டும். பல்வேறுபட்ட மக்களுடனும் உயிர்களுடனும் இணைந்து இயங்கினால்த்தான் ஒருவர் தனது முழுமையானதும் உண்மையானதுமான அடையாளத்தைப் பெறமுடியும். என்னதான் கற்றறிந்த அறிவாளியாக இருந்தாலும் முழு உலகப் பாதிப்பில் இருந்து விடுபட முடியாது.

யுத்தங்கள், அரசியல் பிரச்சினைகளுடான பாதிப்புகள், விரக்தி, நினைத்தவை கிட்டாது போதல், சராசரியிலும் குறைந்த விடயங்களால் ஏற்படும் தாழ்வுமனப்பான்மை எனப் பல விடயங்கள், மனிதனின் வாழ்க்கைப் பயணத்தில் இணக்கமற்ற துன்பநிலையை ஏற்படுத்துதல் எதற்காக என ஆராய்தல் சிரமமானதுதான். நெஞ்சத்தை ஆசுவாசப்படுத்த, தேவையற்ற விதத்தில் உங்கள் வாழ்க்கையில் புகுந்துள்ளவர்களிடம் இருந்து விலகுவது கட்டாயமானது.

உலகோடு ஒத்து இணையாமல், தனிமை வாழ்வு வேண்டாம். துன்பங்கள் இடையூறுகள் இயல்பானது. ஏக்கம், பிரிவு உங்களுக்கு மட்டுமானதல்ல. போராடாமல் பயனை எப்படிப் பெறுவது? காரியசித்திக்கு கடின உழைப்பு அவசியம். தேடாமல் எதுவுமே கிடைக்காது.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கொங்கிரீட் கற்களை அப்புறப்படுத்தவும்



கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் கொட்டப்பட்டுள்ள கொங்கிரீட் கற்களை அப்புறப்படுத்துமாறு, மைதானத்தை பயன்படுத்தும் விளையாட்டு வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் குடிநீர் குழாய்கள் பொருத்துவதற்காக பல வருடங்களுக்கு முன்னர் கொங்கிரீட் வீதிகள் தோண்டப்பட்டன.

அவ்வாறு தோண்டப்பட்ட கழிவு கற்களே இவ்வாறு ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் ஒரு பகுதியில் கொட்டப்பட்டுள்ளன.

குறித்த மைதானத்தை பிரதேசத்திலுள்ள ஏராளமான விளையாட்டுக் கழக வீரர்களும், பாடசாலை மாணவர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்தோடு, குறித்த மைதானத்தை பிரதேசத்திலுள்ள அரச உத்தியோகத்தர்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் உடற்பயிற்சி செய்வதற்குப் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறு நீண்ட வருடங்களாக கவனிப்பாறற்றுக் காணப்படும் கற்களை அப்புறப்படுத்தி அனைவரும் பயன்படுத்தும் வகையில், மைதானத்தை புனரமைத்து தர ஓட்டமாவடி பிரதேச சபை நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் விளையாட்டு வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– எச்.எம்.எம். பர்ஸான்

### தண்டனை வழங்கலை கேள்விக்கு உட்படுத்தும் நகர்வுகள்

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தல்

**லக்ஸ்மன்**

நாட்டில் நடைபெற்று வருகின்ற சம்பவங்கள் மக்களின் வாழ்க்கை நிலையில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடிநிலையையே காட்டிநிற்கிறது. கொலைகள், நடைபெறுமா, கொள்ளை, வழிப்பறி நிகழுமா என்று நாம் எல்லோரும் அச்சத்துடனும் பீதியுடனும் இருக்க வேண்டும் என்பதனையே அவை பறைசாற்றி நிற்கின்றன.

மஹரகம, நாவின்ன பிரதேசத்தில் காணாமல் போன 15 வயதுடைய சிறுமி கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பில் எஜமானியை கண்டம் துண்டமாக வெட்டிக் கொலைசெய்து நகையைக் கொள்ளையிட்ட வேலைக்காரப்பெண், நாட்டில் தற்போது எரிவாயு கிடைக்காமை காரணமாக கொழும்பின் சில பகுதிகளில் மண்ணெண்ணெய் வண்டிகளை வைத்திருந்தவர்கள் மீண்டும் மண்ணெண்ணெய் விற்பனையை தங்களது வண்டிகளூடாக ஆரம்பித்துள்ளனர்; பொலிஸ் குற்ற புலனாய்வுப் பிரிவினர் என்று தம்மை அடையாளப்படுத்தி கணவனைக்கட்டிவைத்துவிட்டு மனைவியிடம் நகை, பணம் கொள்ளையிட்ட சம்பவம். வெலிக்கடை சிறைச்சாலைக்கருகிலுள்ள தேவாலயத்தில் கைக்குண்டு மீட்பு போன்ற செய்திகள் வெவ்வேறு விதமானவையாக இருந்தாலும் பொதுவில் குற்றச்செயல்களாகவே பார்க்கப்படுகின்றன.

நாட்டில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் யுத்தம் நடைபெற்ற வேளை நடைமுறையிலிருந்த கட்டுப்பாடுகள் மீண்டும் கொழும்பில் செயற்படுத்தப்படவுள்ளன. இதற்கான அறிவித்தல் நேற்று விடுக்கப்பட்டிருக்கிறது. தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் கொழும்பு நகரில் குற்றச்செயல்கள், போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கிலும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி, கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நிரந்தர குடியிருப்பாளர்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள், நிறுவனங்கள், அரசு அல்லது தனியார் வளாகங்கள், கட்டுமான ஸ்தலங்கள் போன்றவற்றில் தற்காலிகமாக தங்கியிருப்பவர்கள் பற்றிய விவரங்கள் திரட்டப்படவுள்ளன. இது கொழும்பு எல்லைக்குள் வருகை தருபவர்களை அறிவதற்காக மட்டுமா என்ற கேள்வி இந்த இடத்தில் எழத் தொடங்குகிறது. எதிர்ப்புகள், விமர்சனங்கள் வெளியிடப்பட்டாலும் நடைமுறைக்கு வந்துவிட்டது. கொழும்பில் ஆரம்பிப்பதே தவறு என்றாலும், ஏனைய பகுதிகளுக்கும் இது பரவலாம் என்றும் சந்தேகிக்கத் தோன்றுகிறது.

கொலைகள், கொள்கைகள், ஆட்கடத்தல்கள், போதைப்பொருள் கடகத்தல்கள் என பலதரப்பட்ட குற்றச்செயல்கள் நாட்டின் மாவட்டம், பிரதேசம், கிராமம் என்ற வித்தியாசமின்றி பரவத் தொடங்கிவிட்டன. இவற்றினை எவ்வாறு கட்டுப்படுத்துவதும் குறைப்பதும் அரசாங்கத்தினது கடமையாகும்.

விதிகளையும் சட்டங்களையும் மீறுவது குற்றமாகும். இதற்கான தண்டனை அரசாங்கத்தால் அல்லது நீதி நிறுவனங்களினால் வழங்கப்படுகின்றன. குற்றங்களைக் கட்டுப்படுத்தி சமூகத்தின் இயல்பு நிலையைக் கட்டிக்காப்பதற்காகவே தண்டனை வழங்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் தண்டனைகளால் பயனேதுமில்லையானால் அது வழங்கப்படவே தேவையில்லை என்பதே நிலைப்பாடு.

குற்றமும் அதனைக் கட்டுப்படுத்தும் பொறிமுறைகளில் ஒன்றான தண்டனையும் பெரும்பாலும் எல்லா சமூகங்களிலும் காணப்படும் நடைமுறைகளாகும். குற்றமற்ற சமூகம் என்பது வெறும் கற்பனாவாதமே என்பது சமூகவியலாளர்களின் கருத்தாக இருக்கிறது. ஓர் ஆரோக்கியமான சமூகத்தில் கூட குற்றச் செயல்கள் காணப்படும் என்பதே ஆய்வின் முடிவுகளுமாகும்.

குற்றம் என்பது எழுதப்பட்ட சட்டங்களுக்கு முரணாக ஏதேனும் ஒரு நடத்தை அமையுமாயின் அந்நடத்தை குற்றமாகக் கருதப்படும். சமகால சமூகத்தில் எழுதப்படாத சட்டங்களை அல்லது சமூக நியமங்களால் எதிர்பார்க்கப்பட்ட நடத்தைகளை முரணுக்குள்ளாகும் எந்த நடத்தையும் குற்றம் என்றே கருதப்படும்.

திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெண்கள் மற்றும் பாடசாலைகள் மாணவிகள் மீதான வன்முறைகள், சமூக விரோத செயற்பாடுகளான கசிப்பு உற்பத்தி போதைப்பொருள் விற்பனை கொலை மற்றும் கொலை முயற்சி, திருட்டு உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தல் சமூக மற்றும் கலாசார சீர்கேடுகளை கட்டுப்படுத்துதல், சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோரை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்துதல் என்பது எவ்வளவுக்கு முக்கியமோ அவற்றினை நடைபெறாமலாக்குதலும் சம்பந்தப்பட்டவர்களை புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்துவதுமாகும்.

நாட்டில் பொருளாதாரச் சிக்கல் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற வாழ்வாதார நெருக்கடியானது யாருக்கும் எதிர்கொள்ள முடியாததாகவே மாறியிருக்கிறது. நிதி நெருக்கடியானது பெரும் பிரச்சினையாக மாறியிருக்கின்ற வேளையில் எந்தப் பொருளையும் திருப்தியாக பெற்றுக் கொள்ள முடியாத நிலையும் காணப்படுகிறது. குறிப்பாக மின்சாரம். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் எங்கு எப்போது, எதுவரை துண்டிக்கப்படும் என்பது தெரியாமலே இருக்கிறது. ஒரே வேளையில் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் பலவாறாகக் கருத்துக்களை பகிர்கின்றனர். இதில் எது உண்மை என்று கண்டுபிடிப்பதற்குள் எல்லாம் முடிந்துவிடும் என்றாகிவிட்டது.

ஆர்ப்பாட்டம், வேலைநிறுத்தம், தொழிற்சங்க நடவடிக்கை என்றபடி நாளுக்குநாள் அரசுக்கெதிரான ஆட்சேபனைகளை வெளிப்படுத்தும் நடவடிக்கைகள் ஒரு கலாசாரமாக இந்நாட்டில் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. இந்நிலைமை கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தினைவிடவும் இந்த அரசாங்கத்தின் காலத்தில் கொரோனா கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் வேளையிலும் அதிகமாக இருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கடந்த மாதத்தில் போதைப்பொருள் செயற்பாடுகள் குறித்து கருத்து வெளியிட்ட போது, போதைப்பொருள் விற்பனை பெருமளவில் குறைவடைந்துள்ளதாகவும் அதற்கு பாதுகாப்புத் தரப்பினருடைய கடுமையான செயற்பாடுகளே என்றார். குற்றச் செயல்களை இயக்குவது மற்றும் போதைப்பொருள் குற்றங்களை முன்னெடுப்பதற்கெதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றமை பாராட்டப்பட வேண்டியதே. ஆனால், குற்றச்செயல்கள் அதிகரிப்பதானது கவலைகளையே தோற்றுவிக்கிறது.

நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பேணி குற்றச் செயல்களை கட்டுப்படுத்தி சிறந்த சமூகத்தை கட்டியெழுப்புவததே அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசாங்கத்தின் அந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தனிநபருக்கும் இருக்கிறது. நாட்டில் சட்டம் ஒழுங்கு பேணப்பட்டு சிறந்த சமூகம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

வாள் வெட்டுக் கலாசாரங்கள் யாழ்ப்பாணத்தில்தான் காணப்படுகின்றன என்று செய்திகள் பரவிக் கொண்டிருந்த நிலையில் அண்மைக்காலமாக ஏனைய பிரதேசங்களிலும் இது பரவி வருகிறது. குறிப்பாக கடந்த வாரத்தில் மட்டக்களப்பில் நடைபெற்ற வாள்வெட்டுச் சண்டையில் 7 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற சம்பவம் இதற்கு உதாரணமாகும்.

நாட்டில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலைகள் தொடர்பாகவும் சமூக மற்றும் கலாசார சீர்கேடுகளை கட்டுப்படுத்துதல் தொடர்பாகவும் பல இடங்களிலும் கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. இருந்தாலும் பயன் எதுமில்லை என்பது போலவே தொடர்ந்தும் நடைபெறும் சம்பவங்களால் கவலைகள் வெளிப்படுகிறது.

உயிர்வாழ்வதற்கு யாருக்கேனும் விருப்பமிலாது இருக்குமா என்பதற்கு அண்மைய சமையல் எரிவாயு விற்பனை விழ்ச்சியும் மீள்விற்பனைக்கான செயற்பாடுகளும் பதில்களை வழங்கிவிட்டன. அதே போன்றுதான் வீட்டில் வசிப்பதற்கும், வெளியே புறப்படுவதற்குமான அச்சத்தினைத் தோற்றுவிக்கும் வழிப்பறிகளும் கொள்ளைகளுமாகும்.

குற்றங்களும் கொடுமைகளும் நிகழ்ந்த பின்னர் அவற்றிற்கு தீர்வுகளை எவ்வாறு வழங்க முடியும் என்பதுதான் இந்த இடத்தில் கேள்வியாகும். குற்றவாளியிடமிருந்து சமூகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை அடியாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே தண்டனை என்பதாகும்.

சமூகத்தின் நியமங்கள், விழுமியங்கள் குன்றிப் போகின்றபோது அச்சமூகமே அழிந்துவிடும் நிலைக்குச் சென்றுவிடுகின்றது. இத்தகைய சூழலில்தான் தண்டனையின் முக்கியம் உணரப்படுகின்றது. குற்றத்தால் குலைந்துபோன சமூக ஒற்றுமை தண்டனையால் மீளக் கொண்டுவரப்படுவதாக கொள்ளப்படுகிறது. இந்த இடத்தில்தான் குற்றங்களைக் குறைப்பதற்கும் இல்லாமல் செய்வதற்குமான வழிமுறைகளையும் கட்டமைப்புகளையும் நாம் அவதானத்தில்லெடுக்கவேண்டும்.

அரசாங்கத்தின் கட்டமைப்பில் குற்றங்களை உருவாகாமல் தடுப்பதற்கான ஆலோசனை வழிகாட்டல், முறைமை என பல இருந்தாலும், குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அவற்றுக்குத் தண்டனைகளை வழங்குவதற்கான பொறிமுறைகள் பொலிஸ் பிரிவுகள் தொடக்கம் நீதிமன்றம் வரை பல காணப்படுகின்றன.

குற்றம் செய்த ஒருவர் மீண்டும் அக்குற்றத்தைச் செய்ய முடியாத நிலையில் வைக்கப்பட வேண்டும். திருடியவனை சிறையில் அடைக்கும் போது திருடும் வாய்ப்பு அவனுக்கு இல்லாமல் போகின்றது. கொலைக் குற்றம் செய்த ஒருவருக்கு மரண தண்டனை, தூக்குத் தண்டனை விதிக்கப்படுகின்றது. இதன் மூலம் மீண்டுமொரு கொலை அல்லது படுகொலை தடுக்கப்பட வேண்டும் என்தே எதிர்பார்ப்பாக இருந்தாலும் எமது நாட்டைப்பொறுத்தவரையில் அது சாத்தியமற்றதாகவே காணப்படுகிறது.

அண்மைய விமர்சனங்களின் படி, நாட்டின் ஜனாதிபதி பாரிய குற்றங்களில் ஈடுபட்டவர்களைக் கூட பொது மன்னிப்பில் விடுதலை செய்கிறார் என்பதாகும். இந்த விமர்சனமானது இந்தத் தண்டனை வழங்கல் என்ற விடயத்தினையே கேள்விக்குட்படுத்துகிறது.

சேவை நோக்கில் முத்துவிழா:

# மட்டக்களப்பு சீலோம் வைத்தியசாலை

மருத்துவ சேவை மகோன்னதமான சேவையாகும். நோயினால் வாடுவோருக்கு முதற்கண் மருத்துவராக இருப்பவர் இறைவனே! அவர் தம் பிரதிநிதிகளாக பூவுலகில் மருத்துவ சேவையை வழங்குகின்றவர்களை குறிப்பிடலாம். இத்தகையோர் பணிபுரிவதற்கும் மக்கள் அச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கும் மருத்துவ கட்டமைப்பு இன்றியமையாததாகின்றது.

இக் கட்டமைப்பில் கட்டடங்கள், தளபாடங்கள், மருத்துவக்கருவிகள், நவீன உபகரணங்கள், ஆய்வுகூட வசதிகள், கழிவகற்றும் பொறிமுறை என பலதரப்பட்டதும் பல்வகையானதும் அடங்குகின்றன. இவற்றினை உருவாக்கி, பொருத்தி, பராமரித்து காலத்திற்கு காலம் நவீனமயப்படுத்தி மருத்துவ சேவையினை வழங்குவது பாரியதொரு பணியென்பது கண்கூடு.




**திருவிவிலியத்தில் குறிக்கப்பட்டிருந்த குணமளிக்கும் ஆற்றல் கொண்டதாக கருதப்பட்ட ‘சீலோவாம் குளம்’ என்னும் பெயரிலுள்ள சீலோவாம் என்னும் பதத்தினை முன்னிலைப்படுத்தி ‘சீலோவாம் வைத்தியசாலை’ என ஆரம்பித்து வைக்கப்பட்டது**

இலங்கையில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் போர் உக்கிரமடைந்த காலப்பகுதிகளில் வளங்கள் பொருந்திய அரச வைத்தியசாலைகள் மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே இயங்கி வந்தன. குறிப்பாக நிபுணத்துவ சேவைகள் வழங்கக்கூடிய விற்பன்னர்கள் பற்றாக்குறையாக இருந்த காலம்.

1990இன் ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் மாபெரும் அரச வைத்தியசாலையாக திகழ்ந்திருந்த மட்டக்களப்பு பொது வைத்தியசாலையிலே விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில வைத்திய நிபுணர்களே கடமையாற்றினர். சத்திரசிகிச்சை பிரிவிற்கு ‘எல்லையற்ற வைத்தியர்கள்’ (*Medicine Sans Frontiers (MSF)*) என்னும் தன்னார்வ அமைப்பை சேர்ந்த வெளிநாட்டவர்களே கடமையாற்றினர். சத்திரசிகிச்சை சேவை வழங்கலுக்கென தரமான விற்பன்னர்கள் தேவை மிகவும் அதிகமாக உணரப்பட்ட காலகட்டமது.

இத்தேவையை உணர்ந்து ஒரு சில முக்கியஸ்தர்கள் செயற்பட்டனர். அக்காலப் பகுதியில் திருகோணமலை, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயராக இருந்த பேரருட் கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் குழு ஒன்று செயற்பட்டது. ஒரு தனியார் வைத்திய சாலையை மட்டக்களப்பு மைய பகுதியில் ஆரம்பித்து கத்தோலிக்கர்களின் மறை நூலாகிய திருவிவிலியத்தில் குறிக்கப்பட்டிருந்த குணமளிக்கும் ஆற்றல் கொண்டதாக கருதப்பட்ட ‘சீலோவாம் குளம்’ என்னும் பெயரிலுள்ள சீலோவாம் என்னும் பதத்தினை முன்னிலைப்படுத்தி ‘சீலோவாம் வைத்தியசாலை’ என்ற பெயரில் மட்டக்களப்பு லொயிட்ஸ் அவனியுவில் உள்ள கட்டடம் ஒன்றில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. காலம் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கத்துக்குச் சொந்தமானதும் சுபராஜ் படமாளிகைக்கு அண்மித்ததுமாகிய கட்டடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையில் பிரபல்யமான சத்திரசிகிச்சை நிபுணராக அரச வைத்தியசாலைகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவரும் பலராலும் அறியப்பட்டவருமான வைத்திய சத்திர சிகிச்சை நிபுணர் து.வு.சேவியர் இவ் வைத்தியசாலையில் முழு நேர சத்திர சிகிச்சை நிபுணராக பணியாற்றினார். ஆயரின் அழைப்பிற்கிணங்க உலகளாவிய ரீதியிலும் இலங்கையில் வடபுல யாழ்ப்பாணத்தில் ‘திருச்சிலுவை வைத்தியசாலை’ எனும் வைத்திய வழங்கல் சேவை நிலையத்தின் மூலம் மருத்துவ சேவை வழங்க தகுந்த பயிற்சி பெற்ற ‘திருச்சிலுவை அருட் கன்னியர்கள்’ (*Holy Cross Sisters*). இவ் வைத்திய சாலையில் பணிபுரிய வந்தார்கள்.

இவ் வைத்தியசாலையில் பணியாற்ற உள்ளெடுக்கப்பட்ட ஆளணியருக்கான பயிற்சிகள் மூன்றுவருட காலத்திற்கு தகுந்த பயிற்றப்பட்ட தாதியியல் பயிற்றுவிப்பாளர்களாலும் வைத்திய நிபுணர்களாலும் முறையான பயிற்சிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சத்திர சிகிச்சை, மகப்பேறு, சிசு கவனிப்பு ஆகிய விசேட துறைகளிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அத்தோடு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நிபுணர்களால் தொடர்ந்தேற்சியான பயிற்சிகளும் இவ் ஆளணியினர் பெற்றனர். இவ்வாறாக தகுந்த பயிற்சிபெற்ற ஆளணியினரை உருவாக்கி பணிபுரிந்த ஒரே தனியார் வைத்தியசாலையாக சீலோவாம் வைத்தியசாலை திகழ்ந்தது. சிறிது காலம் ‘திருக்குடும்ப அருட் கன்னியர்கள்’ (*Holy Family Sisters*) இவ் வைத்தியசாலையில் பணியாற்றினர்.

மட்டக்களப்பு ரயில் நிலைய வீதியில் பிரபல்யமாக இயங்கி கொண்டிருந்த வின்சன்ட் மருத்துவமனை 2000 - 2002 ஆண்டுகளில் ஆயரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இதுவரை காலமும் ஏனையவரின் கட்டடத்தில் இயங்கி வந்த சீலோவாம் மருத்துவமனையை சொந்தக் கட்டடத்தில் இயங்க வைக்க இதனால் முடிந்தது. இதன்படி 2002ஆம் வருடம் சீலோவாம் வைத்தியசாலை சேவைகள் வின்சன்ட் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதுடன் அண்மைக் காலம் வரை வைத்திய நிபுணர் சேவியரின் சேவையும் தொடர்ந்தது. அத்துடன் கடந்த 20 வருடத்திற்கு மேலாக வைத்திய நிபுணர்களின் பிரத்தியேக சேவை இவ் வைத்தியசாலைகளில் தொடர்கின்றது.

மிக இக்கட்டான கால கட்டத்தில் மட்டக்களப்பு மாநகரில் ஆரம்பிக்கப்பட்ட சீலோவாம் வைத்தியசாலையின் மூலம் மருத்துவ பயன் பெற்றவர்கள் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களாவர். முழு நிறைவான சேவை வழங்கலில் இவ் வைத்தியசாலை அர்ப்பணிப்புடன் திகழ்ந்ததற்கு காரண கர்த்தாக்களாக இருந்தவர்களுடன் குறிப்பாக வைத்திய சத்திர சிகிச்சை நிபுணர் சேவியர், திருச்சிலுவை அருட் கன்னியர்கள், பயிற்றப்பட்ட ஆளணியினரும் ஆவர். இவர்களுக்கு உறுதுணையாக ஆயரின் முழுமையான பங்களிப்பையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தம்.

ஏறத்தாழ 15 வருடங்களுக்கு முன் அரச வைத்தியசாலை தாதியர் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் உள்ளிட்ட ஆளணியினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த வேளை வைத்திய சேவை மிகவும் பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில் சீலோவாம் வைத்தியசாலையானது தனது பயிற்றப்பட்ட ஆளணியினருடனும் ஆய்வு கூடம், சத்திர சிகிச்சை கூடம், பிரசவ விடுதி போன்றவற்றூடாக மக்களுக்கு தொடர்ந்து சேவை வழங்கியதும் இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

எண்ணற்ற மக்களுக்கு தரமிக்க சிகிச்சை வழங்கிய பெருமை கொண்ட இவ் வைத்தியசாலை இவ் வருடம் (2021) தனது 30 ஆண்டு நிறைவு முத்து விழாவை கொண்டாடுகின்றது.

இவ் வைத்தியசாலையின் தலைவராக மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் மேதகு யோசப் பொன்னையா ஆண்டகையின் கண்காணிப்பில் சிலோவாம் வைத்தியசாலை இயங்குகின்றது. சீலோவாம் எனும் பெயர் மருவி சிலோம்’ என்ற பெயர் மக்கள் வாயிலும் மனதிலும் நிறைந்துள்ளது. வைத்தியசாலையினை வளர்ச்சிப்படியில் இட்டுச் செல்ல தேவையான நவீன உபகரணங்கள் சத்திரசிகிச்சை மேம்பாடு போன்றவற்றில் ஈடுபாடு காட்டப்படுகின்றது.

இலாப நோக்கில் அல்லாமல் சேவை நோக்கில் வசதி குன்றியோர்க்கும் சேவை செய்யும் நிறுவனமாக இது இயங்குகின்றது.

**மிக இக்கட்டான கால கட்டத்தில் மட்டக்களப்பு மாநகரில் ஆரம்பிக்கப்பட்ட சீலோவாம் வைத்தியசாலையின் மூலம் மருத்துவ பயன் பெற்றவர்கள் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களாவர்**

சீலோவாம் என்ற பெயரின் ஆங்கில பதமான *SILOAM* எனும் சொல்லின் ஒவ்வொரு எழுத்தையும் முதலெழுத்தாகக் கொண்ட சொற்களைக் கோர்த்து *SERVICE IN LOVE OF ALL MANKIND* எனும் சொற்றொடரை (தமிழ் மொழி பெயர்ப்பாக) ‘அனைத்து மனித குலத்திற்கும் அன்பிலான சேவை’ எனும் விருதுவாக்கை கொண்டு இயங்குகின்ற சீலோவாம் வைத்தியசாலையானது தொடர்ந்தும் தனித்துவம் மிக்கதும், சுயமாக இயங்கக்கூடியதுமாக மருத்துவ சேவை வழங்கலை மேற்கொண்டு, ‘மக்கள் சேவை மகேசன் சேவையாக’ ஆற்ற இறையருள் பாலிக்க வேண்டும்.



பூர்வீக நிலத்தை யார் காப்பாற்றுவது?

# உருக்குலையும் தமிழர் பிரதேசங்கள்



அ. அச்சுதன்

ஒரு நாட்டிலே வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற மக்கள் கூட்டத்தினரின் இனம், மொழி, சமயம், சமூகப்பண்பாடு ஆகியவற்றை ஆராயும் வரலாற்று விற்பன்னர்களின் தடயங்களில் முக்கியமாக அமைவது ஊரும் பெயருமாகும்.

வடக்கு, கிழக்கில் தமிழர் பிரதேசத்தில் பல பெயர்கள் மருவி, சிதைந்ததோடல்லாது மாற்றப்பட்டும் வருகின்றன. தமிழ் மக்கள் வாழ்ந்த முது நிலங்களின் பெயர்கள், இடங்கள் நாளாவட்டத்தில் திட்டமிடப்பட்டு மாற்றப்பட்டுள்ளன; மாற்றப்படுகின்றன. இவைகளைக் கண்டும் காணாது தமிழ் அரசியல்வாதிகள் பலர் வாழ்ந்து வருகின்றனர்.

1953ஆம் ஆண்டுக்கு முன்னர் குமரன் கடவை, பிரப்பமடு, கீழ்க்கடவை, அடம்பனை என அழைக்கப்பட்ட கிராமங்கள், இன்று கொமறன் கடவெல, திறப்பன, கிவுலக்கடவெல, அடம்பனே என அழைக்கப்படுகின்றன. இச்சுற்றாடலில் உள்ள குளங்களில் சிலவாகிய புறமுறிப்புக்குளம், புலி கண்ட குளம் போன்றவை புறமுறிப்புவேவா, புலிகண்டிவேவா என ஆகி விட்டன, பற்பல ஆறுகள், குளங்கள் இன்று பெயர் மாறிக் கொண்டேபோகின்றன. இவை திருகோணமலை மாவட்டத்தின் வடமேல் நிலத்தில் நடப்பவை.

தென்கீழ் நிலமோ மிகவும் மோசமான நிலைக்கு உட்படுத்தப்படுகின்றது. பழைய பூர்வீகக் கிராமங்களின் பெயர்கள் வேண்டுமென்றே விலக்கப்பட்டு, அரசின் நிர்வாகப்பகுப்புமுறைக்கும், ஆவணங்களுக்கும் திருத்திய புதிதாகச் சூட்டப்பட்ட பெயர்கள் பாவிக்கப்படுகின்றன.

நீலப்பளை போய் அலிஓுவா, லங்கா பட்டன, மிகிந்தபுர, சேருவில என்றும் ஆகிவிட்டன. இந்த நிலையில் திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் பிரதேசத்தில் தமிழர் பூர்வீக பிரதேசங்களில் விகாரை அமைத்து சிங்கள குடியேற்றங்களை அமைப்பதற்கு திட்டம் தீட்டுவதாக பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

திருகோணமலை பெரியகுளம் பிரதேசத்தில் நீண்டகாலமாக பூர்வீகக் குடிகளாக இருக்கும் தமிழ்ப் பிரதேசத்தில் இவ்வாறு விகாரை ஒன்று அமைப்பதற்கு வேலைகள் முன்னெடுத்துச் செல்வதாகவும் சிங்கள மக்கள் இல்லாத ஒரு பிரதேசத்தில் இவ்வாறு விகாரை அமைப்பது பெரும் சர்ச்சையினை ஏற்படுத்தியுள்ளதாகவும் பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.



திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியில் பெரியகுளம் பிரதேசத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னதாக சில விஷமிகளால் மலை ஒன்றிலிருந்து புதையல் தோண்டப்பட்டதாகவும் அவ்வாறு புதையல் தோண்டப்பட்டதாகக் கூறப்படும் மலைத் தொடர், அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தி தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அடையாளமிடப்பட்டு பாதுகாப்புப் படையிடம் கையளிக்கப்பட்ட நிலையில், அவ்விடத்தில் விகாரை ஒன்றை அமைக்க வேண்டும் என பௌத்த பிக்கு ஒருவர் வேலைகளை முன்னெடுத்து வருகின்றார்.

**தமிழர் பிரதேசங்களில் இந்த நிலை நீடிக்குமானால் தமிழர்களின் நிலை என்ன? இந்நிலை நீடியாதிருக்க திருகோணமலை மாவட்ட மக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கண்ணும் கருத்துமாயிருந்து பாதுகாக்க வேண்டும்**

இவ்வாறு அமைக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் விகாரைக்கான பாதையை அப்பிரதேசத்தில் பூர்வீகமாக வசித்துவரும் ஒருவரின் இருப்பிடத்தின் ஊடாக அமைக்கப்பட இருக்கின்ற நிலையில் அதனைப் பெறுவதற்கு பிக்கு ஒருவர் கட்டாயப்படுத்துவதாகவும் தாம் ஆண்டாண்டு காலம் வசித்து வந்த காணியின் ஒரு பக்கத்தின் ஊடாக இவ்வாறு பாதையினை கேட்டு கட்டாயப்படுத்துவது தமது அடிப்படை உரிமை மீறப்படுவதாக பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் கருத்து தெரிவித்தார்.

மேலும் இவ்வாறு அமைக்கப்பட தீர்மானிக்கப்பட்டிருக்கும் விகாரைக்கான பாதைக்கு முன்னரே சுமார் 6 அடி அகலமுள்ள நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டிருந்ததாகவும் அது போதாதென பௌத்த பிக்கு ஒருவரினால் தனிநபர் ஒருவரின் காணியின் ஒரு பகுதியினை தருமாறு கட்டாயப்படுத்துவதாகவும் அவ்வாறு கட்டாயப்படுத்தும் நிலத்தில் தமது அன்றாட ஜீவனோபாயத் தொழிலாக ஒரு சிறிய கடையை நடத்தி வருவதாகவும் அதனை அகற்றி விகாரை அமைப்பதற்கான பாதைக்கு வலியை தருமாறும் வலியுறுத்துவதாகவும் இதன் போது பாதிக்கப்பட்ட நபர் மேலும் கருத்து தெரிவித்தார்.

இந்த நிலையில் இப்பகுதியில் விகாரை ஒன்றினை அமைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து குறித்த பகுதி மக்களால் 07-01-2022 வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் பொது மக்களோடு இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிப் பொதுச் செயலாளர் கலாநிதி ஸ்ரீ ஞானேஸ்வரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடு இக்கட்டான சூழ் நிலையில் காணப்படும் இக்கால கட்டத்தில் அரசு இவ்வாறான திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுவுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் பரவலான பெரும்பான்மையினக் சிங்கள குடியேற்றங்களை நிறுவுவதற்காக அரசால் முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகளை மிகவும் வன்மையாக கண்டிப்பதாகவும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கவலையுடன் தெரிவித்தனர். இப்போராட்டத்தில் இளைஞர்கள் பலர் கலந்து தமது கண்டனத்தை வெளிப்படுத்தினர்.

தமிழர் பிரதேசங்களில் இந்த நிலை நீடிக்குமானால் தமிழர்களின் நிலை என்ன? இந்நிலை நீடியாதிருக்க திருகோணமலை மாவட்ட மக்களும் உள்ளூராட்சி மன்றங்களும் அதன் உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கண்ணும் கருத்துமாயிருந்து எதிர்க்க வேண்டும்; பாதுகாக்க வேண்டும்.









வா. கிருஸ்ணா



### வளத்தையும் சுரண்டி வாழ்வையும் கெடுக்கக் கங்கணம்:

# மண் சுமக்கும் மாணவர்கள்

**மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை தொடர்ச்சியாக எதிர்கொண்டு வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்தவரையில், யுத்த காலத்துக்கு முன்பாக, யுத்த காலத்துக்குப் பின்பான காலப்பகுதியென இரு பகுதிகளாகப் பிரிக்கமுடியும். யுத்த காலப்பகுதியில் செல்வச்செழிப்புடன் வாழ்ந்த மக்கள், யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் மற்றவரில் தங்கிவாழும் நிலையை அதிகளவில் காணமுடிகின்றது.**

இந்தப் பிரச்சினையானது கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் காணப்பட்டாலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவில் காணப்படுவதாக அண்மைக்கால தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட செங்கலடி-பதுளை வீதியானது இயற்கை வளங்கள் நிறைந்த பிரதேசமாக காணப்படுகின்றது. இப்பகுதியை இலக்குவைத்து இன்று தென்னிலங்கையில் உள்ளவர்களும் அதிகமாகப் படையெடுக்கும் நிலைமை காணப்படுகின்றது. ஆனால், இந்த வீதியில் உள்ள மக்கள் மத்தியில் அதிகளவான பிரச்சினைகள் காணப்படுகின்றன.

அதிலும் வறுமை காரணமாக எழும் பிரச்சினைகள் என்பது, ஒரு சமூகத்தின் இருப்பினையே கேள்விக்குறியாக்குவதுடன் அவர்களின் எதிர்காலம் நோக்கிய செயற்பாடுகளும் மிகவும் பாதிக்கப்படும் நிலைமைகள் உருவாகியுள்ளதாக அங்குள்ளவர்களின் தகவல்கள் மூலம் உணரமுடிகின்றது.

> **செங்கலடி-பதுளை வீதியானது இயற்கை வளங்கள் நிறைந்த பிரதேசமாகும். இப்பகுதியை இலக்குவைத்து இன்று தென்னிலங்கையில் உள்ளவர்களும் அதிகமாகப் படையெடுக்கும் நிலைமை காணப்படுகின்றது. இதனால் இந்த மக்கள் மத்தியில் அதிகளவான பிரச்சினைகள் காணப்படுகின்றன**

குறிப்பாக செங்கலடி பதுளை வீதியை எடுத்துக்கொண்டால் சுமார் 25க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. படுவான்கரையாக கணிக்கப்படும் இப்பகுதியானது செங்கலடி தொடக்கம் புல்லுமலை வரையான பகுதியாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதியாக கணிக்கப்படுகின்றது. இப்பகுதியில் சுமார் 10ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் வசித்துவருகின்றன. இவர்களின் வாழ்வாதாரமாக மீன்பிடி, விவசாயம், சேனைப்பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு ஆகியவை பிரதானமாக கொள்ளப்படுகின்றன.

இப்பகுதியில் உறுகாமம், கித்துள் போன்ற பிரதான குளங்களும் பல பாய்ச்சல் குளங்களும் காணப்படுவதன் காரணமாக, இப்பகுதியானது என்றும் இயற்கை வளங்கள் நிறைந்த பகுதியாக காணப்படுகின்றது.

ஆனால், இப்பகுதியில் உள்ள மக்களின் வாழ்வாதாரம் என்பது மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. குறிப்பாக வறுமை காரணமாக இங்குள்ள இளைஞர்கள் தவறான பாதைகளுக்கு வழிநடத்தப்படுவதுடன் இளவயது திருமணங்கள் அதிகரித்துள்ளதாகவும் பாடசாலைகளில் இடைவிலகல் நிலையும் அதிகரித்துவருவதாக அங்குள்ள பொது அமைப்புகளினால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் செங்கலடி -பதுளை வீதியில் முன்னெடுக்கப்படும் மண் அகழ்வுகள் காரணமாக இந்த நிலைமை தொடர்ச்சியாக ஏற்படுவதாகவும் சமூக சீர்கேடுகள் இதன் காரணமாக அதிகரித்துவருவதுடன் போதைப்பொருள் பாவனையும் இளம் சமூகம் மத்தியில் அதிகரித்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

செங்கலடி - பதுளை வீதியில் மண் அகழ்வு என்பது சட்டத்துக்கு உட்பட்ட வகையிலும் சட்டத்துக்குப் புறம்பான வகையிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

இப்பகுதியில் தினமும் ஆயிரக்கணக்கான கியூப் மணல்கள் அகழப்பட்டு இலங்கையின் பல பாகங்களுக்கு அனுப்பப்படுவதுடன் சில வேளைகளில் வெளிநாடுகளுக்கும் கடத்தப்படுகின்றது. இந்த மண் அகழ்வு காரணமாக இப்பகுதியில் உள்ள ஒரு பகுதியினர் வேலைவாய்ப்பைப்பெற்றாலும் அதன் ஊடாகவே சமூக சீர்கேடுகளும் அதிகரித்துவருவதாகவும் இந்த மண் அகழ்வு காரணமாக இப்பகுதியை சேர்ந்த மக்களுக்கு எந்தவிதமான நன்மையுமில்லையெனவும் இப்பகுதியை சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மண் அகழ்வு நடவடிக்கைகளில் கூடுதலாக வயது குறைந்த இளைஞர்களே அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றனர். ஆறுகளில் இறங்கி மண் அள்ளிக்கொண்டுவந்து வெளியில் குவிக்கவேண்டியது இவர்களின் வேலையாக இருக்கின்றது. அதிகளவான மண் குவிப்பவர்களுக்கு அதிகளவான சம்பளம் வழங்கப்படுகின்றது. ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய் தொடக்கம் ஐந்தாயிரம் ரூபாய் வரையில் இந்த மண் அகழ்வால் ஓர் இளைஞர் வருமானம்பெறும் நிலை காணப்படுகின்றது.

இந்தப் பகுதியை பொறுத்த வரையில் அதிகளவான வறுமையில் உள்ளவர்களும் கல்வியறிவு குறைந்தவர்களும் அதிகளவானோர் உள்ள பகுதி என்ற காரணத்தினால், சிறுவர்கள் கல்வி ரீதியாக ஊக்கப்படுத்தல் என்பது கிராம மட்டத்தில் குறைந்தளவில் காணப்படுவதன் காரணமாக, இதனை சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் மண் மாபியாக்கள் இவ்வாறான சிறுவர்களை பயன்படுத்தி இந்த மண் அகழ்வு பணிகளை முன்னெடுக்கும் நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மண் அகழ்வு வேலையானது மிகவும் சிரமம்மிக்க வேலையென்ற காரணத்தினால், மண் அகழ்வில் ஈடுபடுபவர்கள், அதிகளவில் போதைப்பொருள் பாவனைக்கும் உட்படுத்தப்படும் சம்பங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. போதைப்பொருள் பாவித்துவிட்டு மண் அகழ்வுகள் முன்னெடுக்கும்போது அதிளவில் மண்அகழமுடிவதன் காரணமாக இளையோர் போதைப்பழக்கத்துக்கு மண்மாபியாக்களினால் தூண்டப்படும் நிலையும் காணப்படுகின்றது.

இளைஞர்கள், சிறுவர்கள் மத்தியில் அதிகளவான பணப்புழக்கம் காரணமாக ஏனைய சிறுவர்களுக்கும் ஊக்கமளிக்கும்

> **வயது குறைந்த இளைஞர்களே அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றனர். ஆறுகளில் இறங்கி மண் அள்ளிக்கொண்டுவந்து வெளியில் குவிப்பது இவர்களின் வேலையாகும். அதிகளவான மண் குவிப்பவர்களுக்கு அதிகளவான சம்பளம் கிடைக்கும். ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய் தொடக்கம் ஐந்தாயிரம் ரூபாய் வரையில் இளைஞர் வருமானம்பெறுகிறார்கள்**

நிலையினை ஏற்படுத்துவதன் காரணமாக ஏனைய சிறுவர்களும் இந்த மண் அகழும் தொழில்துறைக்குள் நுழைவதன் காரணமாக பாடசாலை இடை விலகல் நிலை அதிகரித்துவருவதாக அப்பகுதியில் உள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

“செங்கலடி சந்தியிலிருந்து கித்துள் சந்தி வரையான சுமார் 16 கிலோ மீற்றர் தூரத்தினைக்கொண்ட பிரதான வீதியில் சின்னவன்துறை, உகந்தனாறு, கொக்குறுந்திமடு, கல்வாடித்துறை ஆகிய பகுதிகளில் பிரதான வீதியிலிருந்து உட்பக்கமாக எட்டுக் கிலோ மீற்றருக்கு அப்பால் மண் அகழ்வுகள் நடைபெறுகின்றன. இப்பகுதியில் சட்ட ரீதியானதும் சட்ட ரீதியற்றதுமான மண் அகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இதில் அதிளவான பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தப்படுவதுடன் அவர்கள் போதைக்கும் அடிமையாகும் நிலைகாணப்படுகின்றது. அத்துடன் மண் அகழ்வில் ஈடுபடும் இளைஞர்கள் பாடசாலை மாணவிகளை காதல் வலையில் வீழ்த்தி இளவயது திருமணமும் அதிகரிக்கின்றது. அதிகளவான மாணவர்கள் பாடசாலை கல்வியினை இடைநிறுத்தி மண் அகழ்வில் ஈடுபடுவதன் காரணமாக மாணவர்கள் இடைவிலகலும் அதிகரித்துள்ளது”என இப்பகுதியில் செயற்பட்டுவரும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் கிராமிய இணைப்பாளர் சாரதா தெரிவித்தார்.

“மண் அகழ்வில் ஈடுபடும் இளைஞர் தொழில் இல்லாத காலத்தில் கொள்ளையில் ஈடுபடுவதாகவும் இதன் காரணமாக அன்றாட வருமானத்திற்காக வளர்க்கப்படும்

> **மண் அகழ்வில் ஈடுபடுவோர் தொழில் இல்லாத காலத்தில், அன்றாட வருமானத்திற்காக வளர்க்கப்படும் கோழிகள், கால்நடைகள் களவாடப்படும் சம்பவங்களும் இப்பகுதியில் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. கித்துள், சர்வோதய நகர் ஆகிய பகுதிகளில் ஒரு மாதத்தில் மட்டும் 28 மாடுகள் களவாடப்பட்டுள்ளன**



கோழிகள், கால்நடைகள் களவாடப்படும் சம்பவங்களும் இப்பகுதியில் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. கித்துள், சர்வோதய நகர் ஆகிய பகுதிகளில் ஒரு மாதத்தில் மட்டும் 28 மாடுகள் களவாடப்பட்டுள்ளன”எனவும் அவர் தெரிவித்தார்.

“30வருட யுத்த காலத்தினை நாங்கள் அனுபவித்துள்ளோம். அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான உதவிகளும் கிடைக்காத நிலையில் “நாங்கள் யாரிடமும் கையேந்தவில்லை. சூழ்நிலைக்கு ஏற்பட்ட எமது வளத்தினை பயன்படுத்தி எமது தேவையினை பூர்த்திசெய்தோம். அக்காலத்தில் எமது பகுதிகளில் எந்தவித பிரச்சினைகளும் ஏற்படவில்லை. அந்த அனுபவத்தினைக்கொண்ட நாங்கள், இன்றைய சூழ்நிலையினை எதிர்கொண்டு வாழவேண்டும். மண் அகழ்வினைப் பொறுத்தவரைக்கும் மட்டக்களப்பில் உள்ள அரசாங்க அரச பிரதிநிதிகளே மண் அனுமதிப்பத்திரங்களை அதிகளவில் வைத்துள்ளனர். கொழும்பு, பொலநறுவை உட்பட பல பகுதிகளிலும் இருந்து அரசியல்வாதிகள் இங்கு வருகின்றார்கள். மண் அனுமதியை வைத்துள்ளவர்கள் அதிகளவான மண்ணை அகழவேண்டும் என்பதற்காக இளைஞர்களை போதைவஸ்த்துக்கு அடிமையாக்கி தன்னைமறந்து கூடுதலான மண்ணை அள்ளச்செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான ஒரு செயற்பாடின்போது மண் குழிக்குள் அகப்பட்டு சிறுவன் ஒருவர் கித்துள் பகுதியில் உயிரிழந்த சம்பவமும் நடைபெற்றது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு பின்னால் செல்லவேண்டாம் என நாங்கள் பிரதேச சபை ஊடக தொடர்ச்சியான அறிவுறுத்தல்களை வழங்கிவருகின்றோம். ஆனால் இன்றுள்ள ஆட்சியாளர்கள் அவ்வாறான நிலையினை ஊக்குவிக்கும் வகையில் செயற்படுகின்றனர். இதனை மாற்றவேண்டிய தேவையுள்ளது

> **மண் அகழ்வு, மிகவும் சிரமம்மிக்க வேலையென்ற காரணத்தினால், மண் அகழ்வில் ஈடுபடுபவர்கள், அதிகளவில் போதைப்பொருள் பாவனையிலும் ஈடுபடுகிறார்கள். போதைப்பொருள் பாவித்துவிட்டு மண் அகழும்போது, அதிளவில் மண்அகழ முடிவததால் இளையோர் போதைப்பழக்கத்துக்கு மண்மாபியாக்களால் தூண்டப்படும் நிலையும் காணப்படுகின்றது**

என ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.சர்வானந்தன் தெரிவித்தார்.

“சட்ட விரோதமான முறையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் குறித்து கரடியனாறு பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றபோதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. தமிழர்கள் யுத்த காலத்தில் ஒரு வாழ்க்கை வழக்கமுறையினை வாழ்ந்தார்கள். அந்த முறையினை நாங்கள் பின்பற்றினால் மாத்திரம்தான் நாங்கள் இந்த நாட்டில் வாழமுடியும்” எனவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து வளங்களும் கொண்ட இப்பகுதியில் இதுவரையில் ஒரு தொழிற்சாலை கூட இல்லாத நிலையிலும் வாழ்வாதாரத்திற்கான நிலையான செயற்பாடுகளை முன்னெடுக்காத நிலையிலும் இவ்வாறான செயற்பாடுகளை தடுப்பது என்பது மிகவும் கஸ்டமான விடமாகவேயிருக்கும்.

எதிர்காலத்திலாவது புலம்பெயர்ந்த மக்கள் இங்குள்ள வளங்களைக்கொண்டு தொழிற்சாலைகளை அமைத்து வேலைவாய்ப்புகளை வழங்குவதன் மூலம் சிறந்த உற்பத்திகளை பெறமுடிவதுடன் தற்போதுள்ள சூழ்நிலையினை மாற்றுவதற்கான சந்தர்ப்பமாகவும் அமையும் என்பது அனைவரது எதிர்பார்ப்புமாகும்.







விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 15 ஜனவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.